தொழில்

இந்த இதழில்

	பக்கம்
தொழிலின் வளம் ...	2
தலையங்கம் :	
உண்டா, இல்லையா? ...	3
கட்டுரைகள் :	
தொழில் வர்த்தக இலாகாவில் மோசடி ...	5
பக்ரா நங்கல் திட்டத்தின் முன்னேற்றம் ...	6
மெட்ரிக் முறை நுட்பம் ...	14
தொடர்கதை : இணைந்த உள்ளங்கள் ...	9
கைத்தொழில் : கண்ணாடித் தொழில் ...	17
சிறுகதைகள் :	
கண்ணீர் ...	21
பாரதி காட்டிய பாதை ...	24
பாரதி சொன்ன சலவைத் தொழில் ...	15
கவிதை : வெண்ணிலவும், வெண்முகிலும். ...	21
சினிமா : பெரிய கோயில் (விமர்சனம்) ...	25

Sree Jayalakshmi & Co.,

MAKERS OF CANE FURNITURE

114, ராயப்பேட்டை ஈரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.

எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பலநிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து, குறித்த நேரத்தில் தவறாது டெலிவரி செய்கிறோம்.

வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும்.

ரயில் பிரயாணத்தில் சாமான்கள் சேதம் அடையாமல் இருக்க உத்திரவாதத்துடன் பேகிங் செய்கிறோம்.

உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

மற்ற விபரங்களுக்கு இன்றே எழுதவும்.

For any purpose, any type, we have a pattern for you. All articles are guaranteedly prepared in high class canes with best workmanship which gives long lasting service. All shades of enamel paints given to the articles. Prompt delivery for local and moffussil orders. Nice paking to avoid damage during transit. Your patronage is earnestly solicited For further details please contact the above address.

உரிமையாளர்,

K. N. ராஜன்.

144855

தொழிலின் வளம்

அதிகாரிகளின் சோர்வு

சென்னை ராஜ்யத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சிறு தொழில்களுக்கு உடனடியான உதவிகள் மிகவும் அவசியம். ஆனால் பழைய முறையில் இல்லாமல் புதிய முறையில் சிறுதொழில்கள் அதிகமாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்கின்ற கொள்கையை நாம் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால் பழைய முறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சிறு தொழில்கள் வளர மூலதனம் கொடுப்பதிலும் மூலப்பொருள்கள் உதவிகள் செய்வதிலும் பல தடங்கல்கள் ஏற்பட்டு இருப்பதை கண்ணால் பார்க்கக் கூட சகிக்க முடியவில்லை. இதற்கு மூலகாரணம் ஒரு சில அதிகாரிகளின் கவனக் குறைவுதான். அலட்சியப் போக்குத்தான். பழைய முறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழிலுக்கு வேண்டிய மூலதனத்தையும் மூலப்பொருள்களையும் கொடுத்து உதவிகள்செய்து தொழில் வளரக்கூடியவகையில் அதிகாரிகள் கவனத்தை செலுத்தும்படி வற்புறுத்துகிறோம்.

புதிய முறையில் சிறு தொழில்களை ஆரம்பிக்கப்படுவதை மக்கள் வரவேற்பார்கள் என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு.

தொழில் வளர்ந்தால்தான் நம் நாட்டுமக்கள் நல்வாழ்வு காணமுடியும் என்பதை நம் முதன் மந்திரி ஸ்ரீ. கே. காமராஜ் அடிக்கடி பல மேடைகளில் சொல்லி வருகிறார். இதை ஒருசில அதிகாரிகள் மறந்து விடுவது மக்கள் மனதில் வேதனையாகவே இருக்கின்றது.

ஆகவே நடந்ததை மறந்து நடக்கவேண்டியவைகளில் அதிக கவனம் செலுத்தி தொழில் வளரவும், பொது மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகும்படி நடந்து கொள்ளவும் வேண்டுகின்றேன். (Small Scale Industries) சிறு ரக தொழில்கள் வளர்ச்சிக்கென தனி இலாகா பணிபுரிந்து வருகிறது. அந்த இலாகாவின் உதவியை ஒருவர் பெறுவது தெனின் மலையை யுடைத்து எலியைப் பிடிப்பது போன்றதாயுள்ளது. Small Scale Industries சிறு ரக தொழில்கள் என்பவை அரசாங்கம் கருதியுள்ளவாறில்லை.

அற்ப முதலில் அன்றாடத் தேவைக்குரிய பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்து தங்கள் வாழ்நாளைக் கழித்து வந்த சிலரல்ல—பலர், இன்றைய அரசாங்க கெடுபிடியால் தாங்கள்நடத்தி வந்த சிறு தொழிலைத் துறந்துவறுமையில்வாடுகின்றனர். இது குறித்து விவரிக்கின் பெருகும். ஆகவே, சூழ்நிலையை அனுசரித்து அரசாங்கமும், அதிகாரிகளும் சிறு தொழில்கள் வளர்ச்சிக்கான திட்டங்களை உடனடியாய் நிறைவேற்றுவதில் ஆர்வங் கொள்ள வேண்டுமாய்க் கோருகிறோம்.

Phone : 2438 Grams : MARIGOLD

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம்	(இரண்டு கலர்)	100—0—0
,, ,,	(ஒரு கலர்)	75—0—0
ராப்பர்உள் பக்கம்		75—0—0
சாதாரண முழு பக்கம்		60—0—0
,, ½ பக்கம்		30—0—0
,, ¼ பக்கம்		20—0—0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,

அட்வர்டைஸ்மெண்ட் மானேஜர்,

"தொழில்"

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 1—10—58	இதழ் 11

உண்டா, இல்லையா?

தாம்பரம்—விழுப்புரம் மின்சார ரயில் திட்டம் படும்பாடு சொல்லத்தரமன்று. கடந்த பல ஆண்டுகளாக நாளிதழ்களில் இத்திட்டம் பற்றி வந்துள்ள செய்திகள் கணக்கில் அடங்கா. பொறுமைக்கே இலக்கணமாயுள்ளவர்கள் தமிழ் மக்கள். என்ன நடந்தாலும் அல்லது நடக்காவிட்டாலும் இயக்கம், கிளர்ச்சி இவற்றில் இறங்கமாட்டார்கள். அடுத்த எண்ணெ சுத்திகரிப்பு நிலையம் அஸ்ஸாமில் இல்லையென்றால் அங்கு பெரும் அமளி துமளிப்படும். மாநில மந்திரி சபை கூட ஆட்டம் காணும். மத்திய அரசாங்கம் முன் வந்து உறுதி மொழிகள் வழங்கும். 'காபுரா' செய்வதில் வட இந்திய ராஜ்யங்கள் ஒன்றைவிட மற்றொன்று சளைத்ததல்ல. ஆனால் தமிழ் நாட்டின் போக்கே தனி. இங்கு எப்போதும் அமைதி நிலவும்; பண்புக்கு உறைவிடம். முன்னுக்குப் பின் முரண்பட்ட செய்திகள் வரும்பொழுது தான் தமிழ் மக்களின் பொறுமையை மத்திய அரசாங்கம் கோழைத்தனமாகக் கருதுகிறதோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

அண்மையில் டில்லி ராஜ்ய சபையில் ஒரு கேள்விக்கு மத்திய சர்க்கார் உதவி ரயில்வே மந்திரி ஸ்ரீ எஸ். வி. ராமசாமி பதிலளிக்கையில், விழுப்புரம் வரை மின்சார ரயில் போக்குவரத்து விஸ்தரிப்புத் திட்டம் அந்நியச் செலாவணி கிடைக்கும் வரை ஒத்தி வைக்கப்படலாம் என்று கூறியிருக்கிறார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தாம்பரம்—விழுப்புரம் மின்சார ரயில் திட்டம் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். மந்திரி பதிலின் பொருள் புலப்படவில்லை. "உண்டா, இல்லையா" என்பது புலனாகவில்லை. முதல் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டு வந்து, பின்பு அதில் இடம் பெறவில்லை என்று கடைசியில் அறிவிக்கப்பட்ட திட்டம் அது. இப்போது இரண்டாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மத்திய மந்திரியின் பதிலைப் பார்த்தால் நடப்புத் திட்டத்தில் விழுப்புரம் வரை மின்சார ரயில் விஸ்தரிக்கப்படுமா என்ற ஐயப்பாடு யாருக்கும் எழாமல் இருக்காது.

டில்லி மந்திரி பதிலளித்த பின்பு இரண்டொரு நாட்களில் சென்னை மேல் சபையில் ஒரு கேள்விக்கு மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் பதிலளிக்கையில் தாம்பரம்-விழுப்புரம் மின்சார ரயில் திட்டம் ஒத்திப் போடப்படமாட்டாதென்று கூறியுள்ளார். மத்திய மந்திரி ஒரு விதமாகவும், மாநில மந்திரி மற்றொரு விதமாகவும் பதிலளித்துள்ளனர். நிலைமையைத் தெள்ளத் தெளிவாக விளக்கி இந்திய அரசாங்கம் ஒரு அறிக்கை வெளியிடுவது இன்

நன்றி மறவா நண்பர்கள்

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்ற பொருளாதார உதவி கோரி அமெரிக்காவுக்கு தூது சென்றுள்ள இந்திய அரசாங்க நிதி மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய், அமெரிக்க ராஜாங்க மந்திரி ஸ்ரீ டல்லஸுடன் உத்ஸாகமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் காட்சியை இவ்விதழ் அட்டையில் காண்கிறோம்.

பிரிவு உபசாரம்

'தினமணி' ஆசிரியர்க் குழுவில் பணிபுரிந்து வந்த திரு வ. உ. சி. சுப்ரமண்யம் அவர்கள் (வ. உ. சிதம்பரனாரின் புதல்வர்) சென்னையி லுள்ள அமெரிக்க செய்தி பிரசுர ஸ்தாபனத்தின் (யூஸிஸ்) தமிழ்ப்பகுதி ஆசிரியராக சேர்ந்ததை முன்னிட்டு தினமணி ஆசிரியர்க் குழுவினர் பிரிவுபசாரம் நடத்தினர். முன் வரிசையில் இடமிருந்து வலமாய் மூன்ருவதாக அமர்ந்திருப்பவர்.

றியமையாதது என வற்புறுத்துகிரேம்.

மாநில சர்க்கார் நமது ராஜ்யத்தில் நடப்புத் திட்டக்காலத்தில் புதிதாக 13 இருப்புப் பாதைகள் போடுமாறு சிபாரிசு செய்திருந்தனர். ஆனல் அவற்றில் ஒன்றுகூட இரண்டாவது திட்டத்தில் சேர்க்கப்படவில்லை! இது மிகவும் வருந்தத்தக்கது; கண்டிக்கத்தக்கதும் கூட. உதவி ரயில்வே மந்திரி ஸ்ரீ ராமசுவாமி தனி அக்கறை எடுத்துக்கொண்டு, ஒன்றிரண்டு பாதைகளையாவது நடப்புத்திட்டத்தில் சேர்ப்பார் என நம்புகிரேம். அமைதிக்கும், பொறுமைக்கும் புகழ் பெற்ற தமிழ் மக்களுக்கு மத்திய அரசாங்கம் வழங்கக்கூடிய சிறந்த பரிசு மாநில அரசாங்கத்தின் சிபாரிசுகளில் சிலவற்றையாவது ஏற்றுக்கொள்வது தான் என வலியுறுத்துகிரேம்.

தொழில், வர்த்தக இலாகாவில் ரூ. 17,883 மோசடி!

—●—

சிறு தொழில் பிரிவின் முன்னாள் குமாஸ்தா கைது

—✻—

சென்னை சர்க்கார் வர்த்தக, தொழில் இலாகாவின் சிறு தொழில் பிரிவில் நடந்த மோசடி சம்பந்தமாக, அப்பிரிவின் மாஜி அப்பர் டிவிஷன் குமாஸ்தாவான ஆதிசேஷ ராஜு என்பவர் நேற்று கைது செய்யப்பட்டார். கடந்த வருஷம் அவர் வேலையிலிருந்த பொழுது அத்தொழில் ஸ்தாபனத்துக்குச் சொந்தமான ரூ. 17,883-12-0-ஐ தனது சொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டு மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது.

1957 ஆகஸ்ட் 31-ந் தேதியன்று ஆதிசேஷ ராஜுவிடம் சுமார் ரூ. 36,994-கொண்ட செக் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும், ரிசர்வ் பாங்க் பெயரில் அந்தப் பணம் செக் எழுதப்பட்டு பணத்தை வாங்கும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. அவர் அப் பணத்தைப் பெற்றுக்கொண்டு சுமார் 14,110 ரூபாய்க்கு கல்கத்தா மெஸர்ஸ் பவர் ஒல் ஆப்ஸன்ஸெஸ் லிமிடெட் பெயருக்கு செக் வாங்கியதாகவும், பெங்களூர் மிஷின் டூல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் பெயருக்கு சுமார் 17,883 ரூபாய்க்கு செக் வாங்கத் தவறியதாகவும் கூறப்படுகிறது. அதன் பின்னர் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு அத்தொகையில் சுமார் 17,883 ரூபாயுடன் மறைந்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது. நகர் போலீஸ் குற்ற இலாகாவுக்கு புகார் செய்யப்பட்டது.

ஆதிசேஷ ராஜுவை போலீஸார் நேற்று கைது செய்தனர். மேற்கொண்டு புலன் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

(தினமணி)

[சென்னை அரசாங்க தொழில் வர்த்தக இலாகாவில் கண்காணிப்பு பலப்பட வேண்டுமென்று "தொழில்" சென்ற இதழில் எழுதியது. மேலே பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தி நமது கருத்தை உறுதிப்படுத்துகிறது. டைரக்டர் திரு. டி. கே. பழனியப்பன் ஐ. ஏ. எஸ். தமக்குக் கீழ் உள்ள ஒவ்வொரு பிரிவிலும் தலையிட்டுக் கண் காணிப்பு செய்வாரானால் பல கோளாறுகள் வெளியாகும். தவறுகளை "தொழில்" அவ்வப்போது சுட்டிக் காட்டத் தயங்காது.

——

பாலசமுத்திரம் குலாலர் மடாலயத் திறப்புவிழா.

பழனியை அடுத்துள்ள பாலசமுத்திரம் சாலியவாகனப்புதூரில் புதிதாக அமைக்கப்பட்ட மடாலயத்திற்கு 15—9—58 தேதி காலை 7 மணி அளவில் இவ்வூர் கிராமக் கர்ணம் ஸ்ரீ V. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் ஆகமப்படி மந்திர ஜெபம் செய்து கும்ப நீர் தெளிக்கப்பட்டது. பின்னர் நடந்த பொதுக்கூட்டத்தில் ஷி யூர் கி. மு. திரு. பழனியாண்டி அவர்கள் தலைமை வகித்தார். அது சமயம் பழனி ஸ்ரீ பட்டத்து விநாயகர் கோவில் டிரஸ்டி திரு. N. மாரிமுத்து வேளார் அவர்கள் விழாவைப் பாராட்டிப் பேசினார். பிறகு குலால சமூகப் பெரியார் காலம் சென்ற போடி ஸ்ரீமான் A. S. அழகண்ணன் செட்டியார் அவர்கள் உருவப்படத்தை பழனி பால் பண்ணை ஸ்டோர் செயலாளர் போடி, திரு. K. P. சுப்புராஜ் அவர்கள் திறந்துவைத்து நாட்டு மக்களுக்கும், குலாலமக்களுக்கும் அப்பெரியார் செய்துள்ள உதவிகளைப்பற்றிப் பாராட்டிப் பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் பழனி முனிசிபல் கவுன்சிலர் திரு. K. பெரியசாமி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது நிறைவேறியது.

●

பக்ரா நங்கல் திட்டத்தின் முன்னேற்றம்

பக்ரா நங்கல் திட்டமானது, முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, இரண்டாவது திட்டத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிற மிகவும் முக்கியமான திட்டங்களிலொன்றாகும். இத்திட்டம் பூர்த்தியடையும்போது, நாட்டில் 10 லட்சம் டன் உணவுத் தானியங்களும், 6,00,000 பேல் நீண்ட இழைப் பருத்தியும் அதிகப்படியாய் உற்பத்தியாவதற்கு வகை ஏற்படும்.

கிராமப் பிரதேசங்களில் புதிதாக 30 நகரங்களும் அனேக கிராமங்களும் உருவாகும்.

இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள அனேக புதிய தொழில்துறைத் திட்டங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் மின்சார சக்தி மலிவாக சப்ளை செய்யப்படும்; புது டில்லிக்கும் மின்சார சப்ளை கிடைக்கும். நங்கலில் இப்போது ரசாயன உரத் தொழிற்சாலையொன்று நிர்மாணிக்கப்பட்டுவருகிறது. அது ஆண்டு தோறும் சுமார் 4,00,000 டன் ரசாயன உரத்தை (நைட்ரோ லைம்ஸ் டோன்) உற்பத்தி செய்யும், அது 1,00,000 கிலோ வாட் மின்சார சக்தியைப் பயன்படுத்திக்கொள்ளும்.

பக்ரா அணைக்கட்டுஸ்தலமானது டில்லியிலிருந்து 200 மைல் தூரத்தில் ஸட்லெஜ் நதியில் ஆழ்ந்த பள்ளத்தில் அமைந்திருக்கிறது. வெள்ளங்கள் ஏற்படும்போது வருகிற உபரித் தண்ணீரைச் சேமித்து வைப்பதற்காக சுமார் 700 அடி உயரமுள்ள அணை ஒன்று அங்கே இப்போது கட்டப்பட்டு வருகிறது. அந்த ஸ்தலத்திலிருந்து கீழ் நோக்கிச் சென்றால் 3 மைல் தூரத்தில் நங்கல் அணைக்கட்டு ஸ்தலம் அமைந்திருக்கிறது. அங்கே ஸட்லெஜ் நதி ஜலத்தை நங்கல் கால்வாயில் திருப்பிவிடுவதற்காக 90 அடி உயரத்தில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது.

1908-ம் வருஷத்திலிருந்து பரிசீலனையிலிருந்து வருகிற இத்திட்டம் 1945-ல் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய ராஜ்யங்களில் ஆண்டுதோறும் சுமார் 36 லட்சம் ஏக்கராவுக்குப்பாசன வசதி கிடைக்கும்.

இத்திட்டத்தின் மூலம் 4,00,000 கிலோ வாட் மின்சார சக்தி உற்பத்தியாகும். இந்த மின்சார சக்தி வீட்டு உபயோகங்களுக்கும், தொழில் துறை, விவசாயத் துறை உபயோகங்களுக்கும் பயன்படுத்தப்படும். அது குழாய்க் கிணறுகளை இயக்குவதற்கும் பயன்படும்.

வெள்ளங்களினால் ஓடி வருகிற பெருவாரியான தண்ணீரை இந்த அணைக்கட்டு தேக்கிவைக்கிறபடியால் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஸட்லெஜ் நதி வெள்ளத்தினால் ஏற்படுகிற சேதங்கள் கணிசமாகக் குறைந்துவிடும்.

சிர்ஹிண்ட் கால்வாயின் சீரமைப்பு வேலை பல வருஷங்களாக நடைபெற்று வருகிறது; 1949-லிருந்து அக்கால்வாயில் தண்ணீர் ஓட்டம் அதிகரித்திருக்கிறது.

நங்கல் திருப்ப அணை, நங்கல் கால்வாய், நங்கல் கால்வாய் மீது ஒரு மின்சார உற்பத்தி நிலையம் ஆகியவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அவை வருஷத்தில் சுமார் 4 மாத காலம், அதாவது நதியில் அதிகம் பிரவாகம் ஏற்படுகிற காலத்தில் வேலை செய்து வருகின்றன.

பக்ரா அணை உச்சபட்சம் 57 லட்சம் ஏக்கரா அடி ஜலத்தைச் சேமித்து வைக்கும் சக்தி வாய்ந்தது.

பக்ரா அணையும் அதன் மின்சார உற்பத்தி நிலையமும் 1960 வாக்கில் பூர்த்தி செய்யப்படும்.

1958 ஜூலையில் நதியில் வெள்ளம் ஏற்படும்போது அந்த அணைக்குப் பின்புறத்தில் 4,00,000 ஏக்கரா ஜலத்தைத் தேக்கி வைப்பது சாத்தியமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1959 வெள்ளங்களின் போது, அதாவது ஜூலை ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் சுமார் 31 லட்சம் ஏக்கரா

(1) பக்ரா அணைக்கட்டு ஸ்தலத்தில் அணை நிர்மான வேலை நடந்துகொண்டிருப்பதைக் காணலாம்.
(2) பக்ரா அணை வாய்ப் பகுதியில் வேலை நடப்பதைக் காட்டுகிறது. (3) பக்ரா மின்சார நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வருவதைக் க ணலாம் (4) நங்கல் அணையின் ஒரு தோற்றம்.

அடி உபரித் தண்ணீரை அது சேமித்து வைக்கும்; அதில் 17 லட்சம் ஏக்கரா அடி தண்ணீர் நீர்த் தேக்கத்தில் நிலையாகத் தங்கிவிடும்; மீதி 14 லட்சம் ஏக்கரா அடி தண்ணீர் நீர்ப்பாசனத்துக்கும் மின்சார உற்பத்திக்கும் உபயோகப்படுத்தப்படும். 1960-லிருந்து அந்த அணையும் அதைச் சேர்ந்த பகுதியும் பூரணமாக வேலை செய்ய ஆரம்பித்துவிடும்.

• பக்ரா நங்கல் திட்டத்தின் மொர்த்தச் செலவு 185 கோடி ரூபாய் அல்லது 38.9 கோடி டாலர். அதில் பக்ரா அணை நிர்மாணத்துக்கு 54 கோடி ரூபாயும் (11.3 கோடி டாலர்), திருப்ப அணைகள் உட்பட கால்வாய்கள் அமைப்புக்கு 61 கோடி ரூபாயும் (12.8 கோடி டாலர்), மின்சார உற்பத்தி, சப்ளை வேலைகளுக்கு 70 கோடி ரூபாயும் (14.7 கோடி டாலர்) செலவாகும் என்று தோராயமாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

❋

தான்தோன்றிகள் !

❋

"தன்னினும் சிறந்தோனில்லை
தரணியில் என்றே எண்ணும்
சின்னப் பயல்களின்று
சிறப்புறு சொற்கள் தேடி
முன்னதாய் வைத்து ஏய்க்கும்
மோசமே வோங்கிப் போச்சு
என்ன நான் சொல்வேன் காலம்
இந்நிலை யெய்தலாமோ!"

—கோமான்

ஹரிஜனங்களுக்கு

மந்திரி ஸ்ரீ கக்கனின் வேண்டுகோள்

ஸ்ரீ பெரும்பூதூர் தாலூகா மணிமங்கலம் கிராமத்தில் ஹரிஜன லீகின் சார்பில் சென்னை ராஜ்ய ஹரிஜன நல மந்திரி கனம் ஸ்ரீ P. கக்கன் அவர்கட்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. கூட்டத்திற்கு பஞ்சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ கைலாச முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். கனம் மந்திரி அவர்கட்கு ஸ்ரீ S. சிங்காரம் அவர்களால் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

'தொழில்' பத்திரிகையின் ஆசிரியரும்; சென்னை கார்பொரேஷன் ஆல்டர்மேனுமான ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் பேசும்போது ஹ்ரிஜனங்கள் ஒற்றுமையாய் இருந்து ராஜ்ய சர்க்கார் அளிக்கும் உதவிகளை தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும், காங்கிரஸில் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்து தேசிய ஸ்தாபனத்தை பலப்படுத்தவேண்டுமென்றும் தெளிவாயும், விரிவாயும் பேசினார்.

பிறகு செங்கற்பட்டு ஜில்லா கிராம நல அதிகாரி ஸ்ரீ T. G. நம்பியப்பன் அவர்கள் ஹரிஜன மக்கள் ஒற்றுமையாய் இருந்து முன்னேற்றமடைய வேண்டுமென்று பேசினார்.

ஹரிஜன நல மந்திரி ஸ்ரீ P. கக்கன் அவர்கள் பேசும்போது ஹரிஜனங்கள் பாகுபாடில்லாமல் ஐக்கிய மனோபாவத்தோடு முன்னேற வேண்டுமென்றும் எதிர்கட்சியினரின் பொய்ப்பிரசாரங்களுக்கு செவிசாய்க்கக்கூடாதென்றும் எச்சரித்தார். ஏழைகளான ஹரிஜனங்களுக்கு வீடுகட்டிக்கொடுத்தும், கிணறு எடுத்தும், ரோடு அமைத்தும், கல்விக்கான வசதி செய்தும் தர தன்னாலான முயற்சிகளைச் செய்வதாய்க் கூறினார்.

வந்தனோப்சாரத்தோடு கூட்டம் இனிது முடிவுற்றது.

இளைஞர் பொழுது போக்கு மன்றம்

பாரதி—திரு. வி. க. நினைவு நாள்

ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்கள் தலைமை வகித்தார்

சென்னை, பூங்கர் நகர், இளைஞர் பொழுது போக்கு மன்றத்தின் இரவுப் பள்ளியின் சார்பில் 19—9—58 அன்று, பாரதி திரு. வி. க. நினைவு நாள் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு "தொழில்" ஆசிரியர், திரு. கே. பெருமாள் உடையார் அவர்கள் தலைமை வகித்தார்.

திரு. நா. ஜகந்நாதன். எம். ஏ. அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், பாரதியாரின் பெருமையையும், அவரின் அரியபடைப்பாம் கவிதைகளின் தன்மைகளையும் குறித்து விளக்கினார்.

தலைவர் திரு. கே. பெருமாள் உடையார் அவர்கள் தமது தலைமை உரையில், திரு. வி. க. விடம் தாம் பணிபுரிந்த போது, அவரின் நற்குண நற்செய்கைகளையும் அவருடைய தொண்டுகளையும், அறிந்தது பற்றியும், பாரதியாரின் எளிமையான இனிமையான பாட்டால் மாணவர்கள்பயனுறும் வழியையும் விளக்கினார். திரு. வி. க. பாரதியார், வ. உ. சி. போன்ற மாபெரும் தேசபக்தர்கள் பட்டபாடு பட்டுத்தான் தேச விடுதலைக்கு வழிகோலினார்கள். அவர்கள் உழைப்பு நமக்கு சுயாட்சியைத்தேடித்தந்தது. தேடிய சுதந்திரம் நிலைபெற நாமெல்லாம் தீவிரமாய்ப் பாடுபடவேண்டும் என்று பேசினார்.

திரு. வி. டி. இராமகிருஷ்ணன், திரு. எஸ். எமுத்து, மாணவன் திரு. தெய்வசிகாமணி ஆகியோர் பாரதியாரைக் குறித்து மிக அழகாகப் பேசினார்கள்.

மன்ற செயலாளர் திரு. ம. அரங்கநாதன் வந்தனோபசாரம் கூற விழா இனிது முடிவுற்றது.

பாண்டிச்சேரிக்கு

"தொழில்" பத்திரிகையின்
ஏஜெண்டாக
நியமிக்கப்பட்டிருப்பவர்

T. சுப்பிரமணியன்

அந்தோணி சைகில் ஸ்டோர்,

29, தென்னண்ட புல்வார்,

புதுவை.

தொடர் கதை :

—புலவர் நா. தேவநாதன்—

முன் கதைச் சுருக்கம்

எஸ். எஸ். எல். ஸி. வரை படித்த செல்வ நம்பி மேலும் படிக்கத் துடிக்கிறான். ஏழைக்குடும்பத்தில் பிறந்தக் காரணத்தால் மேலும் படிக்க முடியாமல் வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறான். வெளியூரில் ஓர் பணக்காரர் உதவியை நாடுகிறான். அவர் விரட்டவே, வழியிலிருந்த கார் ஒன்றிலிருந்த பணத்தையும், துணியையும் திருடுகிறான். திருடின சொகுசான உடையோடு வேறொரு ஆளோடு ஓட்டல் அறையில் தங்குகிறான். அவனோடு சேர்ந்து திட்டமிட்டு சினிமாவுக்குச் செல்லும் வழியில் குழந்தையின் கழுத்துச் சங்கிலியை அறுக்கிறான், மறுநாள் வைத்தியக் கல்லூரியில் சேரப்போகிறான். தான் காரிலிருந்து திருடிய பணமும் உடையும் தலைவருடையவை யென்றறிகிறான். தன் பொருளைத் திருடியவன் என்றறிந்தும் கல்லூரித் தலைவர் அவனை ஆதரிக்கிறார்.

பொன்னியம்மாள் மகனைத்தேடி மருதமுத்துவின் வீட்டுக்குப்போய் அங்கிருந்து விரட்டப்பட்டு வேறொரு ஊருக்குப்போகிறாள். செல்வநம்பி பணஉதவி நாடி பல ஊர் சென்று ஓர் ஊரில் வாட்சுமேன் வேலை பார்த்து பிறகு வெளிக்கிளம்பி வைதீகரிடம் சிக்கி கடைசியில் வைதீகமறியாதவரிடம் போகிறான்.

நாத்திகர் புத்தி கூறி பணமும் தருகிறார். அதை, பட்டினியால் பரதவிக்கும் நெசவாளி குடும்பத்தார்க்கு கொடுத்து விட்டு திருட்டு ரயிலேறி மருதமுத்துவின் ஊருக்கு வருகிறான். பூங்காவில் போகும்போது கலாவதி வீசி விளையாடிய மாங்காய் அவன் மேல் விழுகிறது.

அடுத்து நடப்பவைகளைத் தொடர்ந்து படியுங்கள்.

கலாவதி ஏதுந்தோன்றாமல் சிலையாய் நின்று விட்டாள்.

முல்லை, ஒரு புறாவை எறிந்த போது அது பறந்து வந்து கனகராசன் கையில் சிக்கிக்கொண்டது. கனகராசன் முல்லையைப் பார்த்து ஒரு புன் முறுவல் பூத்து, அவள் மீது செல்லும்படி புறாவை எறிந்தான். முல்லை முகம் சுளித்த நிலையில் தலை குனிந்து நடக்கலானாள்.

கனகராசன், முகப் பொலிவழிந்து நின்று பார்த்துக்கொண்டிருக்கிறான்.

கலாவதியும், முல்லையும் சோலையை விட்டு வீட்டிற்குச் சென்றனர்.

இந்தப் பெரிய இடத்து நிகழ்ச்சி இவ்வாறு இருக்க சிவராமலிங்க வைத்தியர் குடும்பத்தையும் சிறிது பார்த்து விடுவோம்.

செல்வநம்பியின் உள்ளம் இருளடைந்துள்ளது போலவே வானமும் இருளடைந்து வருகிறது. மழைத்துளிகள் சில விழுந்தன.

திரிந்து கொண்டிருந்த செல்வநம்பி, கோயில் வாசற்படியின் பகுதிக்கு வந்தான்.

சிவராமலிங்க . வைத்தியர் வீட்டில் வேணு மருத்துவப் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிருன். நீலா மருந்துக் கல்லில் மருந்து அரைத்துக் கொண்டிருக்கிருள்.

அண்ணு! அப்பா வண்டியை விட்டு வர்ற நேரமாயிட்டுது. சீக்கிரம் அழைத்துக்கிட்டு வந்துவிடண்ணு......என்று சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது வேணுவும் எழுந்து இரட்டை மாட்டுக் கூடார வண்டியில் உட்கார்ந்து ரயில்வே ஸ்டேஷனை நோக்கி ஓட்டினுன்.

மருத முத்துப் பிள்ளை இறங்கி வருகின்ருர். சிறிது பின் தங்கிய நிலையில் சிவராமலிங்க வைத்தியரும் தென்றலும் வருகின்றனர். தென்றல் யார் தெரியுமா? C. I. D. உத்தியோகத்திற்குப் பழகுவதாக ஒரு நாள் அவனுடைய அறையில் தங்கியிருந்தான் அல்லவா? அவனேதான்.

மருத முத்துப்பிள்ளை தன்னுடைய கார் வராமையைத் தெரிந்து ஒரு ஜட்கா வண்டியில் ஒரு ரூபாய் வாடகை பேசி உட்கார்ந்து விட்டார். வண்டி ஓடியது. சிறிது ஓடியதும் மருத முத்துப்பிள்ளை 'நிறுத்து நிறுத்து' என்று கூவ வண்டிக்காரனும் நிறுத்தி விட்டான். அங்கே சிவராமலிங்க வைத்தியரும் தென்றலும் நின்று கொண்டிருந்தனர். மருதமுத்துப் பிள்ளை வைத்தியரைப் பார்த்து, 'சிவராமலிங்கம்! வண்டிக்காகப் பார்க்கிறீர்களா? வண்டி எல்லாம் போயிட்டுதுங்களே. சிரமம் வேண்டாம். இதிலேயே உட்கார்ந்து விடுங்களேன்' என்ருர்.

வைத்தியரும், தென்றலும் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டனர். வண்டி ஓடியது. வைத்தியர் ஒரு ரூபாயை எடுத்து யாரிடம் கொடுப்பதென்று யோசித்தார். மருதமுத்துப்பிள்ளை கை நீட்டி அதை வாங்கி பாக்கெட்டில் போட்டுக்கொண்டார்.

வழியில் வந்த அவரவர் வண்டிகளில் அவரவர் ஏறிக் கொண்டனர்.

8. கோயில் திருட்டு

அங்கும் இங்கும் அலைந்து திரியும் செல்வ நம்பி, ஒரு தெருவில் உத்சவப் பெருங் கூட்டத்திற்குள் நுழைந்து இறைவன் வடிவைக் கண்டான்.

உத்சவரை உற்றுப் பார்த்தான்: உத்சவச்சிலையின் அழகையல்ல; உத்சவர் கழுத்தில் உள்ள ஒளி மிகுந்த பொன் மாலையை. மீண்டும் சுளித்த முகத்துடன் தலை குனிந்து விட்டான்.

கோயிலின் முன் கதவு மட்டும் மூடியுள்ளது. (சிறிய சந்து) பார்த்தால்மூன்று வாசற்படிக்கு முன் உள்ள மூலவர் வடிவம் தெரிகிறது. கூட்டம் எல்லாம் திரண்டு சென்றுவிட்டன. கோயிலண்டை யாருமில்லை.

கோவிலின் வெளிக்கதவு மூடப்பட்டுள்ளது. அக்கதவைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டான். உள்ளே சிறு சிறு அளவில் நாணய ஓசைகள் கேட்கின்றன.

துணிந்து அக்கதவின் நுழை வாயிலில் ஏறி, மெல்ல உள்ளே இறங்கி விட்டான். ஆனுல், உள்ளே செல்லத் தயக்கம். எதையோ பார்த்து விட்டான்—சட்டென்று விலகி மறைவாக நின்று கொண்டான். மூலவர் பக்கத்தில் அருச்சகர் தெரிந்தார்.

மூலவர்—ஆதிநாராயணன் கழுத்தில் பதினைந்தாயிரம் அளவு மதிப்புள்ள நகைகள் உள்ளன.

அருச்சகர் மூலஸ்தானத்துக்குப் பின்புறம் மூலையைத் திரும்பி விட்டார். வெளியில் தாழ் திறந்து கொண்டு போகவும் அவன் விரும்பவில்லை. தாமதித்தாலும் தீமை வந்து விடும். சட்டென்று உள் சென்று கதவின் பின்னுல் நின்று கொண்டான்.

அர்ச்சகர் வாசற்படியின் வெளியில் இருந்தபடியே கதவை அழுத்திப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்.

'ஐயோ! என்னை, 'கடவுளின் காசு மாலையைத் திருடிய நாசகாரன்; கயவன்; கள்ளன்; துரோகி; சமயத் துரோகி' என்று இந்த உலகம் வசை கூறுமே' என்று எண்ணினுன்.

செல்வநம்பியும் சிலையின் அருகில் நெருங்கினுன். மணிவண்ணன் மார்பிலிருந்து ஓர் பொன் மாலையும் செல்வநம்பியின் கைக்கு வந்து விட்டது. சட்டென்று தன் கழுத்தில் மாட்டிக் கொண்டு, சட்டையால் மறைத்துக் கொண்டான்.

கருப்பக் கிரகத்தின் கதவும் திறக்கப் படுகிறது. செல்வநம்பி விரைந்து வந்து கத

வின் பின்புறத்திலேயே நின்று கொண்டான். அருச்சகர் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும் போது அன்பர்களும் சிலர் நுழைந்தார்கள். கோயில் அருச்சகர் சிலையின் முன் நின்று கொண்டு வாயைப் பிளந்து விட்டார். நடுங்கிய உடலுடன் இப் பக்கம் திரும்பி நோக்கினர். வெளி வாசற்படியில் செல்வநம்பி வேகமாக அடிவைத்துச் செல்லுகிறான். அருச்சகர் குழறியபடி, 'பிடி பிடி அவனை' என்று கூக்குரலிட்டார். உள்ளிருந்து வந்தவர்கள் அவனைத் துரத்திக் கொண்டு ஓடி வருகின்றனர்.

செல்வநம்பி, பின்னால் ஓடி வருபவர்களைப் பார்த்து விட்டான். திருடன் திருடன் என்று கூவிக்கொண்டே அவனும் ஓடுகிறான்.

செல்வநம்பி சிறிது தூரம் ஓடுவதற்குள் அவன் சட்டை நனைந்து விட்டது. உள்ளேயிருக்கும் காசு மாலையின் அடையாளம் வெளியில் தெரியலாயிற்று. இதை இரண்டு போலீஸ்காரர்கள் மட்டும் கண்டு பிடித்து விட்டார்கள். சத்தமில்லாமலேயே செல்வநம்பியைத் துரத்திக் கொண்டு வருகின்றனர். மருதமுத்துப் பிள்ளையின் காரும்கூடத் திருடனைப் பிடிக்க கண்ட இடங்களில் வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது.

செல்வ நம்பியின் கால்கள் ஓடி ஓடி அலுத்து விட்டன. போலீஸ்காரர்கள் தத்தித் தவறி ஓடும் செல்வநம்பியின் கையிலிருந்த நான்காயிரம் பெறுமான முள்ள காசுமாலையை பிடுங்கிக் கொண்டனர். ஆனால் அவனைப் பிடிக்கவில்லை. செல்வநம்பி மூச்சு இறைத்தபடியே சேற்று நீரில்விழுந்து அந்த ரோட்டில் கிடக்கிறான். பின் வந்த போலீஸ்-ும் முன் வந்த போலீஸ்-டன் ஓடி விட்டன.

காசு மாலை கொண்டு சென்ற போலீஸ்காரர்கள், நெடுக ஓட வில்லை. அச்சமயத்தில் சிறிது தூரத்தில் மூலை திரும்பிய காரின் மின் விளக்கு ஒளி இருவர் முகத்திலும் பட்டுத் திரும்பியது. திடுக்கிட்டனர் இருவரும் எப்படி ஓடுவது என்று தெரியாமல் ஒரு புதரில் ஒளிந்து கொண்டனர். காரும் அண்மையில் வந்து விட்டது.

9. அன்பு இருந்தும் அறிவில்லையானால்........?

வேகமாக வருகின்ற அந்தக்கார் யாருடைய காரோ அல்ல; மருத முத்துப் பிள்ளையின் கார்தான், மருத முத்துப்பிள்ளை மகன் கனகராசன் தான் கார் ஓட்டுபவன்.

நகையைத் திருடிய போலீஸ்காரர், நகையை மண்ணில் புதைத்து விட்டு, சென்று விட்டனர். விழுந்து கிடந்த செல்வ நம்பியை காரில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தனர் மருதமுத்துப்பிள்ளையும், அவர்மகனும். அவன் சுய உணர்வடைந்து எழுந்து நடந்தான்.

மருத முத்துப் பிள்ளைக்குச் சிறிது கோபமும் வருகிறது. நன்றி கூறாமல் போகிறானே யென்ற வருத்தம். கனகராசனின் எண்ணம், செல்வநம்பியை அழைக்கலாம் என்பதே. கலாவதி அவனை அழைக்க விரும்புகிறாள். 'அப்பா!' என்றனர் கனகராசனும், கலாவதியும். அதைக்கேட்ட மருத முத்துப்பிள்ளையும் 'தம்பி!' என்று செல்வ நம்பியை அழைத்தார். செல்வநம்பியும் செல்வதை நிறுத்தித் திரும்பிப் பார்த்தான்.

'தம்பி! நீ இங்கேயே தங்கியிரு. அவசரப் பட்டு செல்லாதே' என்கிறார் மருத முத்துப்பிள்ளை. இதைக் கேட்டதும் செல்வ நம்பிக்கு மகிழ்ச்சிதான். செல்வ நம்பி மருத முத்துப் பிள்ளையை அன்பும் அடக்கமும் அமைந்த நிலையில் பார்க்கிறான். என்னை ஒரு பட்டப் படிப்பாளனுக்கும் வரையிலாவது உங்களால் நிச்சயம் காக்கமுடியுமா? அப்படியானால் சொல்லுங்கள். 'முடியாது' என்றாலும் தயங்காமல் சொல்லுங்கள் வாழ்ந்தால் கவலையற்ற நிலையில் வாழவேண்டும். இன்றேல் கவலையின்றி வீழ்தல் வேண்டும். உறுதிச் சொல் சொல்ல முடிந்தால் மட்டுமே சொல்லுங்கள் என்றான். அப்போது அங்கே வந்த கலாவதி தன் கழுத்தில் உள்ள ஒரு தங்க மாலையைப் பார்க்கிறாள். 'அப்பா முடியாதென்று சொன்னால் இதைக் கூட கொடுத்துவிடலாமே' என்று துணிந்திருக்கிறாள். கனகராசன் மனதில் தன் வயதுள்ள இந்த இளைஞனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்தது. மருத முத்துப்பிள்ளை, 'சரி தம்பி! உன்னிஷ்டம் போல் பட்டதாரி ஆக்கி அனுப்புகிறேன். வலிய எந்த விஷயத்திலும் தலையிட்டுக்காம வந்த நேரத்துக்கு சாப்பிட்டு உன் வேலையைக் கவனிக்கணும் சரிதானே?' என்றார்.

பொழுது விடிந்தது. செல்வநம்பி தன்னை ஆதரித்த பிள்ளை அவர்களிடத்திலும் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லா

மல் மறைத்து விட்டான். மறந்து சொல்லா மல் வைக்கவில்லை. அதனுல் வரும் தீங்கை அறிந்து சொல்லாமல் வைத்து விட்டான்.

தன்னிடமிருந்த காசு மாலையைக் கழற்றிக் கொண்ட போலீஸாரும் செல்வ நம்பிக்குத் தெரியும்; அப்போலீஸின் நெம்பரும் தெரியும். 'நேராகச் சென்று கேட்க வேண்டும்.' கொடுக்க மறுத்தால் அதற்கு மேல் ஆக வேண்டுவதைச் செய்ய வேண்டியதுதான். என்னைப் போல் அவனும் ஏழைதானே! ஏன் அவனை விசாரணை கூண்டிற்கு அனுப்பி வேதனைப் படலத்தைத் துவக்கி விட வேண்டும் என்று எழுந்தான்; சீக்கிரம் வந்து விடலாமென்றெண்ணிப் போலீஸைத் தேடிப் புறப்பட்டு விட்டான்.

பொழுது விடிந்ததும் போலீஸாரும் செல்வநம்பியைத் தேடிப் புறப்பட்டு விட்டனர். இந்த நகையை வைத்துக் கொண்டு பயந்து சாவதேன்? என்று எண்ணி நகையைப் புதைத்து வைத்துள்ள இடத்திற்குச் சென்றனர் போலீஸார்.

செல்வ நம்பியும் அலைந்து தேடிக்கொண்டிருக்கிறுன் அவர்களை. இந்த வழியாகச் செல்வ நம்பியும் வருகிறுன். 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல்' போலீஸாரும் செல்வநம்பியும் சந்தித்துக் கொள்கின்றனர். சுற்று முற்றும் திரும்பிப் பார்த்துத் தன் பையிலிருந்து காசுமாலையை எடுத்துச் செல்வநம்பிமுன் காட்டினர் பக்கத்திலிருந்த போலீஸ்காரர். 'தம்பி! இதை நீ எடுத்த விஷயமும், நாங்க பிடுங்கிக் கொண்ட செய்தியும் யாருக்கும் தெரியக் கூடாது. இதை எப்படியாவது மருதமுத்துப் பிள்ளையிடத்தில் கொண்டு போய் நல்ல பெயர் எடுத்துக்கோ. நாங்கள் கொண்டு வந்து கொடுத்தால் 'திருடியதுயார்?! ஆளைக் கொண்டுவா என்று சொல்லுவார்கள். என்று சொல்லி அவனிடம் கொடுத்து வணக்கம் செலுத்தி இரண்டடி எடுத்து வைத்தனர். செல்வ நம்பியும் வணக்கம் செலுத்திவிட்டு, தானும் அவர்களுடன் புறப்பட்டு வருகிறுன்.

முன்னெரு சமயம் செல்வநம்பி தியேட்டர் வெளியில் ஒரு செல்வந்தர் குழந்தையின் கழுத்தில் நகையைத் திருடிவிட்டானல்லவா! நகையைப் பறி கொடுத்த பெண் குழந்தை மருத முத்துவின் தெருவில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்ததுதான். செல்வ நம்பியைப் பார்த்து விட்டது. வீட்டிற்குள் ஓடியது அப்பாவிடம் சொல்லி விட்டது. அப்பாவும் தெருவிற்கு வந்து அவனைப் பார்த்துவிட்டார்.

செல்வநம்பி போலீஸாருக்கு ஒரு முறை வணக்கம் செலுத்தி மருத முத்துவின் பங்களாவிற்குள் நுழைந்து விட்டான்.

இதைக் கண்ட நகையிழந்த நான்காம் வீட்டுச் செல்வந்தர் செல்லுகின்ற போலீஸ்காரர்களை நெருங்கி செல்லுகிறுர்.

மருத முத்துப்பிள்ளை களவுபோன காசு மாலையைப் பற்றி புலன் விசாரிக்கும் யோசனையில் ஆழ்ந்திருந்தார். மற்றெரு முறை சப் இன்ஸ்பெக்டரைச் சந்தித்து வந்த மருத முத்துப்பிள்ளையின் கையில் களவு போன காசு மாலையைக் கொடுத்து விட்டான், செல்வநம்பி.

இதை ஆர்வமுடன் வாங்கிப் பார்க்கும் மருதமுத்துப் பிள்ளைக்கு நகையின் மீதிருந்த ஆசையை விட செல்வநம்பியின் மீது அதிக ஆசை வளர்ந்து விட்டது. 'செல்வ நம்பி! இது எப்படிக் கிடைத்தது உனக்கு?' என்றுர். ஊர்ப் புறமாகச் சென்றேன். ஒருவன் மருண்ட நோக்குடன் வேகமாய் நடந்து கொண்டிருந்தான். நான் சிறிது மருட்டிப் பார்க்கலாம் என்று 'டேய்! காசு மாலை' என்று ஒரு சத்தமிட்டேன். நடந்தவன் ஓடலானுன். நானும் அவனைத் தொடர்ந்து ஓடலானேன். தப்ப முடியாது என்று தெரிந்து கொண்டான். காசு மாலையைப் போட்டுவிட்டு கம்பி நீட்டலானுன். ஆளைப் பிடிக்கா விட்டால் போவுது, மாலை வந்ததே' என்று இதை எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன்' என்றுன்.

அவர் மகிழ்ந்த மகிழ்ச்சிக்கு அளவு சொல்ல முடியுமோ! நகையை குறித்து தொல்லை எடுத்துக் கொண்டுள்ள சப் இன்ஸ்பெக்டரிடம் சீக்கிரம் சொல்லி விட்டு வர எண்ணினுர். கலாவதியை அழைத்து 'செல்வநம்பிக்குக் காப்பி கொடு. இதோ வந்துடறன்......' என்று சொல்லித் தெருவிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று விட்டார்.

கை கால்கள் அலம்பிய செல்வ நம்பி பசிக்கு ருசியான உணவு கிடைக்கும் என்று எண்ணி தலை சாய்த்த வண்ணம் அறைக்குள் சென்றுன்; உட்கார்ந்தான்.

வர்ழை இலேயில் - அவன் 'போதும்' என்ற அளவுக்கு மேல் பொங்கல் இரண்டு கரண்டி விழுந்தன. தன்னழகுக் கேற்ற செல்வ நம்பியின் அழகான மேனியும், தன் வயதுக் கேற்ற செல்வ நம்பியின் பொருத்த மான வயதும், அகன்ற நெற்றியும் கலாவதி உள்ளத்தை ஈர்த்து விட்டன. செல்வநம்பி யும் தன் சித்தத்தை அவளிடம் பறிகொடுத் தான்.

'அக்கா' என்ற ஒருவகையான ஓசை கேட்டது. காந்தமும் இரும்புப் பிணைப்பி னின்று இழுக்கப்பட்டு விட்டன. செல்வ நம்பியின் உள்ளம் திடீரென்று வேறுபட் டது. 'முல்லை! என்ன?' என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியில் வந்தாள் கலா. இரு வரும் தனியாய்ச் சென்று ரகசியம் பேசத் தொடங்கி விட்டனர். கலாவதி, முல்லை சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டாள். 'செல்வநம்பி, பொன் சங்கிலியைத் திருடி ஞரா? பாவம்! பசிக்காகத் திருடியிருப்பார். அது இப்பொழுது பாரமாக அல்லவோ மூண்டு விட்டது' என்று மெதுவாகச் சொல் லிக் கொண்டே தன் கழுத்தில் இருந்த ஒரு பொன் சங்கிலியைப் பார்த்தாள்.

முல்லை, மீண்டும் தெருப் பக்கம் உள்ள ஒரு அறைப் பக்கம் சென்று கொண்டிருக்கி ருள். சங்கிலிக் குரிய சொந்தக்காரர், வெளி யில் நின்று கொண்டிருந்த போலீஸாரை நோக்கி, 'உம் உள்ளே சென்று அவனைப் பிடித்து வாருங்கள்' என்ருர்.

(தொடரும்)

Phone : 2438 Grams : MARIGOLD

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. S. 5.)

A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trichengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவி களும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலை களும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

மெட்ரிக் முறையைப் பற்றிய நுட்ப விளக்கம்

ஸ்ரீ K. P. வெங்கடாசலம்,
கூட்டுக் காரியதரிசி வர்த்தக தொழிலியல் மந்திராலயம், புதுடில்லி.

மெட்ரிக் முறையை நாம் ஆராய்வோம். இதனுடைய பெயர் அடிப்படை அளவாகிய மீட்டரிலிருந்து தோன்றியதாகும். ஒரு கிலோ கிராம் தண்ணீர் குறிப்பிட்ட நிலைமைகளில் எவ்வளவு இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறதோ அந்தப் பரிமாண அளவுதான் மீட்டர் என்று கூறப்படுகிறது. கிலோ கிராமானது மீட்டர் முறைப்படி அல்லாமல் தனிப்பட்ட முறையில் குறிப்பிடப்பட்ட போதிலும், அது தோராயமாக உச்ச திண்மையிலுள்ள ஒரு கன டெஸி மீட்டர் (ஒரு கன மீட்டரில் ஆயிரத்தில் ஒரு பங்கு) ஜலத்தின் எடைக்குச் சமமாவதாகும். எனவே, எல்லா நடைமுறை காரியங்களுக்கும் மீட்டரும் கன டெஸிமீட்டரும் சமமானவையேயாகும். ஒவ்வொரு அளவுப் பிரிவும் (யூனிட்டும்) அதற்குக் கீழ் அடுத்தபடியாக உள்ள அளவைப்போல் பத்து மடங்கு உள்ளதாகும்.

ஒவ்வொரு தசாம்ச அடுக்கு வரிசைக்கும் அந்த யூனிட்டின் மதிப்பைக் குறிப்பிடக்கூடிய ஒரு வார்த்தை முன் கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மூன்று அடிப்படை யூனிட்டுகள் அதாவது மீட்டர், கிராம், லிட்டர் ஆகியவைகளும் அளவு மதிப்பைக் குறிப்பிடக்கூடிய 6 அடைமொழிகளும் "கிலோ" (1,000), "ஹெக்டோ" (100), "டெக்கா" (10), "டெஸி" (1-10), "சென்டி" (1-100), மில்லி (1-1000) ஆகியவைகளும் சேர்ந்து மெட்ரிக் முறை முழுவதையும் குறிப்பிட்டு வருகின்றன. பரிபூரணமான ஒரு முறைக்கு இருக்க வேண்டிய தன்மைகள் அனைத்தும் மெட்ரிக் முறையில் பூரணமாக அமைந்திருப்பதை நாம் காணலாம்.

✽

Please Contact Us

For all your Iron & Steel Consumer goods Requirements of

Door Hinges, Door Pegs, Wall Pegs, Gate Pegs, Chains, Rings, Nagapasams, Rose Handnails, Flat Headnails Hand Nails, Brass Nails Iron Oven.

&

Agricultural Implements, Sugarcane Pans, G. I. Kawalaisal, G. I. Sals, Buckets, Pots, Drums, Thavas, Cake Pans, Oil Bonds Cakepipes (Iron Br ass) Etc., Etc,,Etc.

P. SUBRAMANIYA CHETTY

(Government Approved Fabricator)

Iron and Hardware Merchants,

Manufacturers and Wholesale suppliers of Consumer Goods.

H. O: 8/21, Wall Tax Road, Madras-3.

BRANCH: 94, Rasappa Chetty Street, Madras-3.

Office: 32-A, Wall Tax Road, Park Town Madras-3

பாரதி சொன்ன சலவைத் தொழில்

[அமர கவி சுப்ரமண்ய பாரதியார்]

வேத புரத்தில் குள்ளச்சாமி என்றொரு பரதேசி இருக்கிறார். அவருக்கு வயது எழுபதோ, எண்பதோ யாருக்கும் தெரியாது. அவருடைய உயரம் நாலரை அடியிருக்கும். கரு நிறம். குண்டு சட்டியைப்போல் முகம். உடம்பெல்லாம் வயிரக்கட்டை போலே நல்ல உறுதியான பேர் வழி.

அவ்ருக்கு வியாதியென்பதே கிடையாது. சென்ற பத்து வருஷங்களில் ஒரே தடவை அவர் மேலே கொஞ்சம் சொரி சிரங்கு வந்தது. பத்து நாளிருந்து நீங்கிவிட்டது. அந்த மனுஷ்யன் ஜடபரதருடைய நிலைமையிலே இருப்பதாகச் சொல்லலாம். பேசினால் பயித்தியக்காரன் பேசுவது போலிருக்கும். இழுத்திழுத்து, திக்கித் திக்கி, முன் பின் சம்பந்தம் இல்லாமல் விழுங்கிப் பேசுவார். தெருவிலே படுத்துக் கிடப்பார். பசித்தபோது எங்கேனும் போய்ப் பிச்சை வாங்கிச் சாப்பிடுவார். மண்ணிலே புரளுவார். நாய்களுடன் சண்டைபோடுவார்.

வீதியிலே பெண்பிள்ளைகளுக்கெல்லாம் அவரைக் கண்டால் இரக்கமுண்டாகும். திடிரென்று ஒரு வீட்டுக்குள் நுழைந்து, அந்த வீட்டிலிருக்கும் குழந்தைகள் நெற்றியிலே திருநீற்றைப்பூசிவிட்டு ஓடிப்போவார். யாராவது திட்டினாலும், அடித்தாலும் பொறுத்துக்கொண்டு உடனே அவ்விடத்தை விட்டு ஓடிப்போய் விடுவார்.

ஸாமானிய ஜனங்கள் அவருக்கு நூறு வயதுக்குமேலே ஆகிவிட்டதென்றும், நெடுங்காலமாக இப்போதிருப்பது போலவே, நாற்பத்து ஐம்பது வயது போலவே தான் இருக்கிறாரென்றும் சொல்லுகிறார்கள். ஆனால், இந்த வார்த்தை எவ்வளவு தூரம் நிச்சயமென்பதை நிர்ணயிக்க இடமில்லை.

அவர் கையால் விபூதி வாங்கிப் பூசிக்கொண்டால் நோய் தீர்ந்து விடுமென்ற நம்பிக்கையும் பலர் கொண்டிருக்கிறார்கள்.

மேற்படி குள்ளச்சாமியார் ஒருநாள் தாம் வீதியில் நடந்துவரும்போது, முதுகின்மேலே கிழிந்த பழங் கந்தைகளையெல்லாம் ஒரு பெரிய அழுக்கு மூட்டை கட்டிச் சுமந்து கொண்டு வந்தார். இந்தச் சாமியாரைக் கண்டால் நான் கும்பிடுவது வழக்கம் அப்படியே கும்பிட்டேன். 'ஈ'யென்று பல்லைக் காட்டிப் பேதைச் சிரிப்புச் சிரித்தார். கண்ணைப்பார்த்தால் குறும்பு கூத்தாடுகிறது.

“ஏ, சாமி! உனக்கென்ன பயித்தியமா? கந்தைகளைக் கட்டி ஏன் முதுகிலே சுமக்கிறாய்?” என்று கேட்டேன்.

“நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கிறாய், நான் முதுகின்மேலே சுமக்கிறேன்” என்று சொல்லிஓடிப்போய்விட்டார். உடனே, நான் பொருள் தெரிந்துகொண்டேன். அஞ்ஞானப் பழங் குப்பைகளையும், பழங்கவலைகளையும் பழந்துன்பங்களையும், பழஞ்சிறுமைகளையும் மனதில் வீணாய்ச் சுமந்து திரியும் ஸாமான்ய மனிதனுடைய அறிவீனத்தை விளக்கும் பொருட்டு ஷை சாமியார் இந்த திருஷ்டாந்தத்தை சொன்னாரென்று தெரிந்து கொண்டேன்.

பின்னொரு நாள் அவரிடம் பரிகாசமாக நான், “சாமி, இப்படிச் பிச்சை வாங்கித் தண்டச் சோறு தின்றுகொண்டு ஜீவனம் பண்ணுகிறாயே, ஏதேனும் தொழில் செய்து பிழைக்கக் கூடாதா?” என்று கேட்டேன்.

அந்தப் பரதேசி சொல்லுகிறார்.

“தம்பி, நானும் தொழில் செய்துதான் பிழைக்கிறேன். எனக்கு சலவை வேலை. ஐம்புலன்களாகிய கழுதைகளை மேய்க்கிறேன். அந்தக் கரணமான துணி மூட்டைகளை வெளுக்கிறேன்” என்றார்.

ஆம், பரிசுத்தப்படுத்துகிறவனே ஆசார்யன். அவனுடைய சொல்லை மற்றவர் ஆசரிக்க வேண்டும். சாமியாருடைய புற நடைகள் குடும்பம் நடத்தும் இருஹஸ்தர்களுக்கு தகுதியல்ல. ஆனால், அவருடைய உள்ள நடையை உலகத்தவர் பின்பற்றவேண்டும். ஐம்புலன்களாகிய கழுதைகளை மீறிச்

செல்லாதபடி சுத்தமாகச் செய்து கொள்ளவேண்டும்.

அழுக்குத் தீர்க்கும் தொழில் செய்வோர் நமது தேசத்தில் மாகாணத்துக்கு லக்ஷம் பேர் வேண்டும். ஹிந்துக்கள் தற்காலத்தில் குப்பைக்குள் முழுகிப்போய் கிடக்கிறார்கள். வீட்டையும், தெருவையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை. ஜலதாரைகளை ஒழுங்கு படுத்தவில்லை. கிணறுகளையும் குளங்களையும், சுனைகளையும், சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை. கோயிற் குளங்களில் ஜலம் புழுத்து நெளிகிறது. நாற்றம் குடலைப் பிடுங்குகிறது.

மனுஷ்யாபிவிருத்தியாவது யாது?

புழுதியை நீக்கித் தரையைச் சுத்தமாக்குதல் அழுக்குப்போக துணியையும், நாற்றமில்லாதபடி குளத்தையும், பொதுவாக எல்லா விஷயங்களையும் சுத்தமாக்கி வைத்துக் கொள்ளுதல்.

நான் மேற்படி சாமியாரிடம், "சாமியாரே! ஞானநெறியிலே செல்ல விரும்புவோர் முக்கியமாக எதை ஆரம்பத் தொழிலாகக் கொள்ளவேண்டும்?" என்று கேட்டேன்.

குள்ளச்சாமி சொல்லுகிறார்:—

"முதலாவது நாக்கை வெளுக்கவேண்டும். பொய் சொல்லக்கூடாது. புறஞ் சொல்லக் கூடாது. முகஸ்துதி கூடாது. தற்புகழ்ச்சி கூடாது. வருந்தச் சொல்லலாகாது. பயந்து பேசக் கூடாது. இதுதான் சலவைத் தொழில் ஆரம்பம்.

பிறகு அந்தக் கரணத்தை வெளுத்தல் சுலபம். சில இடங்களில் பொய் சொல்லி தீரும்படியாக இருந்தால். அப்போது மௌனத்தைக் கொள்ளவேண்டும். மௌனம் ஸர்வார்த்த ஸாதகம். அதை விட்டுப்பேசும்படி நேர்ந்தால் உண்மையே சொல்லவேண்டும். உண்மை விரதம் தவறக்கூடாது. தவறவேண்டிய அவசியமில்லை. உண்மை கூறினால் தீங்கு நேரிடுமென்று நினைப்போர் தெய்வம் உண்மை என்பதை அறியமாட்டார்கள். தெய்வம் உண்மை. அதன் இஷ்டப்படி உலகம் நடக்கிறது. ஆதலால், பயப்படுகிறவன் மூடசிகாமணி. அந்தக் கரணத்தை வெளுத்தலாவது, அதிலுள்ள பயத்தை நீக்குதல் அந்தக்கரணத்தைச் சுத்தி செய்துவிட்டால் விடுதலை உண்டாகும்' என்றார்.

பின்னுமொரு ஸமயம் மேற்படி குள்ளச்சாமி என்னிடம் வந்து "தம்பி, நீ இலக்கணக்காரனாச்சுதே! 'வண்ணான்' என்ற வார்த்தையை உடைத்துப்பொருள் சொல்லுவாயா? என்று கேட்டார்.

நான் நகைத்து "சாமி, உடைக்கிற இலக்கணம் எனக்குத் தெரியாது" என்றேன்.

அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறார்:—

"வண் + ஆன் = வண்ணான். ஆன் என்பது ரிஷபம். வள்ளலாகிய ரிஷபம், நந்திகேசுரர். அவருடைய தொழில் சுத்த ஞான மூர்த்தியாகிய சிவனைச் சுமந்து கொண்டிருத்தல். தமிழ் நாட்டு ஞானாசார்யர்களுக்கு ஆதிமூர்த்தியும், வள்ளலுமாகி நிற்கும் இந்த நந்தி பகவானுடைய தொழிலாகிய ஆசார்யத்தொழிலையே நான் சலவைத் தொழிலென்று சொல்லுகிறேன்." என்று மேற்படி குள்ளச்சாமி சொன்னார்.

ஷை

("பாரதி நூல்கள்"— வசனங்கள் தொகுப்பிலிருந்து எடுத்து கொடுக்கப்பட்டிருக்கிறது—(ஆ—ர்.)

சிற்சிலவிடங்களில் சலவைத்தொழில்என்று மாற்றிகாட்டப்பட்டுள்ளது—(ஆ—ர்)

* * *

"தனி மனிதர்கள் விஷயத்தில் உண்மை எதுவோ அதுவே தேசங்களின் விஷயத்திலும். ஒருவர் அளவுக்கு மிஞ்சி மன்னிக்க முடியாது. பலவீனமானவன் ஒருபோதும் மன்னிக்க முடியாது. மன்னித்தல் என்பது பலசாலிகளுக்குரிய பண்பு ஆகும்.

விரைவில்

எதிர்பாருங்கள்!

"தொழில்"

வெளியீடுகள்

சிறுகதை, இலக்கியம், வரலாறு,

கவிதை, கலை

படைப்புகள்

கண்ணாடி

[G. லாவண்யராஜ்]

நவ நாகரிகம் பெருத்துப் போயுள்ள இக்காலத்தில் கண்களுக்குக் கவர்ச்சியான பொருள்களையே மக்கள் விரும்புவது சகஜமாய் விட்டது. தெளிவு, ஜ்வலிப்பு, சுத்தம், சுகாதாரம் இவற்றின் அடிப்படையில் வாழ்க்கைப்புரிய விரும்புவோர்க்கு கண்ணாடியாலான உபகரணங்களும், பிளாஸ்டிக்கினாலான பொருள்களும் இன்றியமையாதவை யென்ற நிலை ஏற்பட்டு விட்டது. இவற்றை உபயோகிப்பவர்களும் திருப்தியடைகின்றனர், மற்றவர்களும் ரசிக்கின்றனர். எனவே, நவ நாகரிகப் பொருள்களெனவும், இன்றியமையாத சாதனங்களெனவும் பாராட்டப்படுவதால் அவற்றின் உற்பத்தி விபரங்களைக் குறிக்கும் இக்கட்டுரையை பிரசுரிக்கிறோம். முதல் கட்டுரை கண்ணாடியைப் பற்றியது. ஆ—ர்.

ஸ்படிகம் போன்ற தோற்றமும், தெளிவு முடைய கண்ணாடி, நம் அன்றாட வாழ்விற்கு அதிமுக்கியமாக உதவுவது. கண்ணாடியின் உதவியால்தான் இன்று விஞ்ஞானம் முன்னேறியுள்ளது. நம் நாகரிக வாழ்விற்கு உதவிய கண்ணாடி, செய்யப்படும் வரலாற்றையும் முறையையும் காணுவோம்.

குளிர்ந்த நிலையிலுள்ள கண்ணாடி தூய்மையாகவும், கடினமாகவும், அது உடைவதற்குச் சுலபமாகவும்இருக்கின்றது. கண்ணாடி அதிக உஷ்ண நிலையில், திரவமாக உருகுகிறது. சில கண்ணாடிகளில் ஒளி ஊடுருவிச் செல்லும், சில ஒளி ஊடுருவிச் செல்லா. நம் உருவத்தை ஒரு ஒளி புகாக் கண்ணாடியில் பார்க்கலாம்.

கண்ணாடியை; எங்கே,யார் எப்படி முதலில் செய்தார்கள் என்று நமக்குத் தெரியாது. எகிப்தில் 6,000 ஆண்டுகட்கு முன்பு உபயோகித்த அழகு மிக்க ஜாடிகள், புட்டிகள் முதலிய பொருள்களை, இப்பொழுது புதைப் பொருளாராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இப்பொருள்கள் மிக அழகாகவும், திறமையாகவும் செய்யப்பட்டவை.

போனிசியர்களும், கிரேக்கர்களும், ரோமானியர்களும் முற்காலத்திலேயே கண்ணாடியைத் தயாரித்தனர். போனிசியர்களிடமிருந்து ரோமானியர் கண்ணாடி தயாரிக்கக் கற்றுக்கொண்டனர். கண்ணாடி செய்முறையை ஒரு ரகசியமாக எண்ணிப் பாதுகாத்தனர். நிறத்திலும் அழகிலும் உலகிலேயே சிறந்த கண்ணாடிகளாகத் தயாரிக்கப்பட்டது வேனீஸில்தான்.

ஒரு கண்ணாடி தயாரிப்பவன் கண்ணாடிசெய்முறையை வேறொரு நகரிலுள்ள ஒருவனுக்குக் கற்றுக்கொடுத்ததால், வெனீஸியர்கள், அத்தொழிலாளியைக்கொன்று விட்டனர். ஒரு சமயம் கண்ணாடி தயாரிக்க ஒரு புது முறையை ஒருவன் கண்டு பிடித்தான், மற்றவர்க்கு சொல்லிக்கொடுக்கும் முன்பு அவன் இறந்துவிட்டான். அப்புது முறை பயனற்று ஒழிந்தது. முன்பு கண்ணாடி தயாரித்த முறை இப்பொழுது விளங்கவில்லை.

தென் ஜெர்மானியர்கள் அப்பொழுது அழகான கண்ணாடிகள் தயாரித்தனர். அவர்கள் உபயோகித்த பொருள்களையே கண்ணாடித் தயாரிக்கப் பயன் படுத்தினர். ஒருவித அழகான, சுத்தமான மணல் அதிகமாகவும், சோடாவும், கரியும் ஒன்றாய்ச் சேர்த்து அதிக உஷ்ண நிலையில் தயாரிக்கப்பட்டது.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த இங்கிலாந்து மக்கள் தங்களுடைய வீட்டின் சன்னல்களில் கண்ணாடியைப் பதிக்க ஆரம்பித்தனர். முதலில் பதிக்க உதவிய கண்ணாடிகள் கனமாகவும், கரடுமுரடாகவும் மங்கலாகவுமிருந்தது. சன்னல் கண்ணாடிப்பலகைகள், சிறியவைகளாகவுமிருந்தன. பிறகு மிக அழகான சன்னல் கண்ணாடிகள் தயாரிக்கக் கற்றுக்கொண்டனர். கண்ணாடிகளில் வர்ணங்களைத் தீட்டி சில கண்ணாடித் துண்டுகள் இணைத்து பல வித உருவங்களை அமைத்தனர் அம்மக்கள். அக்கண்ணாடிகள் மிக அழகானவைகளாயுள்ளன. பல நூற்றாண்டுகட்கு முன்பு செய்த இக்கண்ணாடிகள் இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலுமுள்ள பெரிய மாதாக் கோவில்களிலும், சிறுமர்தாக் கோவில்

களிலுமுள்ள சன்னல்களில் பதிக்கப்பட்டுள்ளன. சில சிறந்த சன்னல் கண்ணாடிகள் கான்டர்பரி பெரிய மாதாகோவிலில் இருக்கின்றன. இவைகளை இப்பொழுதும் நம்மால் தயாரிக்க முடியாதபடியுள்ளதால், அச் சன்னல்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

பல்லாண்டுகட்குப் பின் சில அழகான கண்ணாடிப் பொருள்கள் மிக ஊக்கத்தின் பேரில் தயாரிக்கப்பட்டன. அப்பொருள்கள் மிக விலையுயர்ந்தவை. இப்பொழுது சிறிது நேரத்தில் இயந்திரங்களின் உதவியால் அதிகமாகத்தயாரிக்கப்படுகிறது. முற்காலத்திய பொருள்களைவிட, இப்பொழுது இயந்திரத்தால் செய்யப்படும் பொருள்கள் விலை மலிவானவை.

கண்ணாடிப் பலகை

சுத்தமான மணல்போன்ற பொருள், சோடா, சுண்ணம்பு இன்னும் பல இரசாயனப் பொருள்களைச் சேர்த்து கண்ணாடித் தயாரிக்கப்படுகிறது. இக்கண்ணாடிகள் அதிக உஷ்ணத்தினால்தான் உருகும். சில்லாண்டுகட்கு முன்பு சூடான கண்ணாடியை நீண்ட ஊது குழாயின் உதவியால் எடுத்து முனையில் ஊதி பல வடிவங்களில் பொருள்களைத் தயாரித்தனர். இப்பொழுது வாயினால் ஊதியும், இயந்திரத்தின் உதவியாலும் கண்ணாடி தயாரிக்கப்படுகிறது. மேற்கூறிய பொருள்கள் கரியின் உஷ்ணத்தினாலும், சுவாலையாலும் மணலும் மற்றைய பொருள்களும் உருகி ஒன்றாய்க் கலக்கின்றன. கூட்டுப் பொருள்கள் கண்ணாடியைப் பாகுபோன்ற திரவமாக்குகிறது. இது உருகின கண்ணாடி எனப்படும். கொதி காலத்தில் மேற்புறத்தில் அழுக்கும், மிதக்கும். அழுக்கும் (scum) பொருள்களும் கண்ணாடியின் மேல் மிதக்கும். உலையின் அடிப்புறத்தை ஒட்டியுள்ள குழாயின் வழியாக வேறொரு தொட்டியையோ அல்லது இயந்திரத்தையோ அது அடையும்.

கண்ணாடித் தொழிற்சாலையிலுள்ளோர் தடித்த உடையை அணிவதில்லை. ஏனெனில் உஷ்ணம் அதிகமாக உள்ளதால்தான். ஒவ்வொருவரும் நீண்ட இரும்பு ஊது குழாய்களை வைத்திருப்பர் உருகின கண்ணாடியில் குழாயின் ஒரு முனையை நனைத்து குழாயின் முனையில் உருண்டையாகக் கண்ணாடி தொங்கும் வரை அக்குழாயைத் திருப்பித் திருப்பி நனைப்பர். கண்ணாடி நிறைய ஒட்டிக்கொண்டவுடன் அதை வெளியில் எடுத்துக் குழாயின் முனையில் கண்ணாடி தொங்குமாறு அசைப்பர். கண்ணாடித்திரவம் குழாயின் முனையில் தொங்கும்போது அக்குழாயின் முனையில் இன்னொரு குழாயைப் பொருத்தி, வாயினால் ஊதுவர். காற்று கண்ணாடியினுள் புகுந்து அதை ஒரு பெரிய கூடான பந்து போலாக்கும். இதை சிறிது சிறிதாகத் திருப்பி உருண்டை வடிவத்திலிருந்து உள்ளீடற்ற சிலிண்டராக்குவர். இது சுமார் ஒரு அடி அகலமும், இரண்டு அடி நீளமாகவுமிருக்கலாம்.

மற்றொருவர் இந்த சிலிண்டர் கண்ணாடியை ஊது குழாயுடன் எடுத்துச் சென்று, கண்ணாடியின் இருமுனைகளையும் வெட்டி விடுவார். பிறகு அந்த உள்ளீடற்ற சிலிண்டர், கண்ணாயிலிருந்து மறுமுனைக்கு செங்குத்தாய் சிலிண்டரின் மேற்புறத்தில் வெட்டுவார். அவர் இக்கண்ணாடிச் சிலிண்டரை ஒரு அடுப்பில் வைத்துச்சூடாக்குவார். சூடாகும் போது சிலிண்டரை வெட்டிய பாகத்தில் சிறிது சிறிதாய்பிளவுபடும். பிளவுபட்டு தட்டையாக மாறும். அடுப்பிலிருந்து அத்தட்டினை எடுத்து சுழற்றப்பட்டு மெருகேற்றப்படும். இது ஒரு ஒளி ஊடுருவிச் செல்லும் சன்னல் கண்ணாடிப் பலகையாகும்.

கண்ணாடிப் புட்டி

ஒரு வருடத்தில் இலட்சக்கணக்கான கண்ணாடி புட்டிகளும் ஜாடிகளும் செய்யப்படுகின்றன. நாம் புட்டிகளில் மருந்துகளும், உணவுப் பொருள்களும், மது வகைகளும், இன்னும் பல பொருள்களும் அடைக்கிறோம்.

பழைய உடைந்த கண்ணாடிகள் கூட கண்ணாடி கலவையில் சேர்க்கப்படுகிறது. சிலசமயம் வர்ணக் கண்ணாடிகளும் கலக்கப் படலாம். யந்திரங்களில் கண்ணாடித் திரவம் செலுத்தப்படும். ஒரு நாளில் 15,000 புட்டிகளைச் சில இந்திரங்கள் செய்கின்றன.

கண்ணாடிப் புட்டி தயாரிக்க ஐந்து பேர் தேவைப்படுகிறது. முதல்வன் ஊது குழாயில் கண்ணாடி திரவத்தைச் சேர்ப்பான். பிறகு ஒரு இரும்பு மேஜையில் அதை உருட்டி, காற்றினால் ஊதி உள்ளீடற்றக் கண்ணாடிப்பந்தாக்குவான். இரண்டாமவன் உள்ளீடற்ற இப்பந்தினை ஒரு வார்ப்படத்திலிடுவான், வார்ப்படத்தின் உருவமே

M. முகம்மது அப்துல் காதர்.

இரும்பு வியாபாரம்

சப் ஜெயில் ரோடு, திருச்சிராப்பள்ளி.



எங்களிடம் பக்கெட், குடம், தொட்டி, ஆலைக் கொப்பரைகள், இரும்பு தகட்டினால் செய்த எண்ணெ சட்டி வகையறாக்கள், வடசட்டி ரகங்கள், தோசைக் கல், ரவா தோசை கல்களும், மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

★

இன்னும், காபி கிளப்புகளுக்கும், மிட்டாய் கடைகளுக்கும் தேவையான இரும்பு சட்டிகளும் குறித்த நேரத்தில் ஆர்டர்களுக்கு சப்ளை செய்யப்படும்.

புட்டிக்கும் ஏற்படும். ஊது குழாயில் ஒரு குழாயைப் பொருத்திக் காற்றைச் செலுத்துவான். பிறகு வார்ப்படத்தைத் திறந்து ஊது குழாயுடன் கூடிய கண்ணாடிப் புட்டியை மூன்றாமவனுக்குப் கொடுப்பான். இவன் குழாயுடன் கூடிய புட்டியை ஒரு இரும்புத் துண்டினால் அடிப்பான். அப்பொழுது ஊது குழாயினின்றும் ஒரு மரத் தொட்டியில் புட்டி விழும். இந்த புட்டி உஷ்ணமாகவே இருக்கும். இப்புட்டி நான்காமவனுக்குச் செல்லும்.

புட்டியின் கழுத்து முனை உடைந்து சொரசொரப்பாயிருக்கும். நான்காமவன் புட்டியின் கழுத்தின் முனையை நல்ல வடிவமாக மாற்றுவான். மிருதுவான, கனமான முனையை யுடைய புட்டியாக மாறும். ஐந்தாமவன் இப்புட்டிகளை ஒரு தட்டில் வைப்பான். அத்தட்டு குளிர் அறைக்குச் செல்லும். குளிர் அறையில் ஒரு புறம் உஷ்ணமாகவும், மறு புறம் குளிராகவுமிருக்கும். சூடான பக்கம் புட்டிகள் வைக்கப்படும். இப்புட்டிகள் மெதுவாகக் குளிர்ச்சி செய்யப்படும். சூடான புட்டி உடனே குளிர்ச்சி செய்யப்பட்டால் உடைந்து விடும். குளிர் அறையின் மறு முனைக்கு புட்டிகள் வரும்போது அவைகள் குளிர்ந்து விடும். அறையின் வாயிலுள்ள பணியாளர்கள் புட்டிகளைப் பரீட்சித்து, நல்ல புட்டிகளை மூட்டைகளாகக் கட்டுவார்கள். ஒழுங்கற்ற புட்டிகள் தொழிற்சாலைக்குத் திருப்பி அனுப்பப்படும். அது மறுமுறை உடைக்கப்பட்டு இரசாயனப் பொருள்களால் இலக்கப்பட்டு மேற்கூறியபடி மறுபடியும் புட்டிகளாகும்.

குறிப்பு: அடுத்து "பிளாஸ்டிக்" தயாரிப்பைப்பற்றிய கட்டுரை வெளியாகும்.

எமக்கு எழுதியனுப்பும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் தொழில் இதழில் 4-பக்கங்களுக்கு மேல் போகாமலும், காகிதத்தின் ஒரு பக்கத்தில் மையினால் தெளிவாகவும், முழுவிலாசத்தோடு மிருக்க வேண்டும். பிரசுரிக்க ஒப்புக்கொள்ளாதவற்றைத் திருப்பிப்பெற விரும்புவோர், அதற்கான தபால் பில்லையும் உடன் அனுப்புதல் வேண்டும்.

—ஆசிரியர்.

வெண்ணிலவும், வெண்முகிலும்.

—:: திருமகன் ::—

விண்ணிலே அசைந்தேகும் வெண்முகிலே—நீ
வெண்ணிலவை மறைப்பதேன் சொல் வெண்முகிலே—இதோ

இன்பமெனக் கீந்தருளும் வெண்ணிலாவை—நீ
இன்னலின்றி வர விடுவாய் வெண்முகிலே!

ஞாலமெங்கும் ஊர்ந்து செல்லும் வெண்ணிலாவை—நீ
காணமின்றி மறைப்பதேனோ வெண்முகிலே—இன்று

கொஞ்சுமுகங் காட்டுகின்ற வெண்ணிலாவை—நீ
கோபங்கொண்டு பார்ப்பதேனோ வெண்முகிலே!

வானிலே மிதந்து செல்லும் வெண்ணிலாவை—நீ
வழி மறித்து நிற்பதேன்சொல் வெண்முகிலே—உன்

சொந்தமென்று நீ நினைத்தாய் வெண்ணிலாவை—என்ன
தந்திரமோ நானறியேன் வெண்முகிலே!

தென்றல் வீசும் காலமிது வெண்முகிலே—நான்
தேடும் 'மதி' காணச் செய்யேன் வெண்முகிலே!

உலகினுக்கோர் கண்ணாடி வெண்ணிலாவும்—நீ
உறவு கொண்டாடிடுதல் என்ன நியாயம்?

காதலரின் துணை விளக்கு வெண்ணிலாவும்—கவி
காவியத்தின் ஓவியமாம் வெண்முகிலே!

தேனிரவில் மான் விழியாள் ஏங்கிநின்று—எந்தன்
தெளிவு முகங் காண நிற்பாள் வெண்முகிலே!

என்நிலை அறியாயோ வெண்முகிலே—இனி
எள்ளி நகை செய்யாதே வெண்முகிலே—பூவில்

ஒன்றித்த உள்ளத்தோர் நாங்களின்று—வேறாய்
ஒதுங்கி யிருப்பதாமோ வெண்முகிலே!

சற்று விலகிநிற்பாய் வெண்முகிலே—அவள்
சந்நிதி நான் செல்லவேண்டும் வெண்முகிலே—என்

கண் பார்வை விளங்கச் செய்யும் வெண்ணிலாவை—நான்
கண்டின்றே நடந்திடுவேன் வெண்முகிலே!

-600 008 1424 855

கண்ணீர்

[அ. ப. பாலகுமார், பி. ஏ.]

அன்றிரவு காற்றும் ஓய்வெடுத்துக்கொண்டது போலும்! கோடைக் காலத்தின் கொடுமை, பகலவன் இருக்கும்போது, இருப்பதைவிட இரவுகளில் தான் அதிகம் என்பதை அன்றைய இரவு இருந்த நிலைமைதெள்ளென எடுத்துக்காட்டியது. வெண்ணிலாவின் வெண்மை ஒளியானது தன்னை மறைத்து மாசுபடுத்தும் மேகமே இல்லாத காரணத்தாலோ என்னவோ, பூரிப்படைந்து அன்று பூத்த அல்லிபோன்று, நீலவானத்திலே, அந்த பரந்த நீலக்கடலே தனக்குத்தான் சொந்தம் என்ற செருக்குக்கொண்டு, அந்த இரவை ஆட்சி செய்துகொண்டிருந்தது! இந்த ஆட்சிக்கு அடங்கி விழித்திருந்தவர் சிலர், கோடைவெய்யில் கொடுமையில் தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தேன் நான். புழுக்கமாயுமிருந்ததால் காற்றுவது வாங்கலாமென்று மாடியை அடைந்தேன். சந்தடியற்றிருந்த அங்குநிலவையே பார்த்த வண்ணமிருந்த எனக்கு, எத்தனையோ எண்ணங்கள் தோன்றி, நிழல்போல மறைந்தன! இந்த எண்ணங்களின் பிரவாகத்திற்கு அணைபோடுவதுபோலஇருந்தது உடனே நடந்த ஒரு காட்சி. ஆனால் அக்காட்சி விண்ணிலே நடந்தது! அதைத்தொடர்ந்து மண்ணிலே நடக்கப்போவதை அறியாமல் அக்காட்சியைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்தேன்.

விண்ணிலே மின்னும் ஒரு நட்சத்திரம் கீழே வீழ்ந்தது. உடனே நான், "யாரோ, பெரியவர்கள் சாய்ந்திருப்பார்கள்" என்று எண்ணினேன். ஏனெனில், என் பாட்டி அப்படிப்பட்டக் கதைகளை அடிக்கடி சொல்லுவாள். நட்சத்திரத்திற்கும் மனிதனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கக்கூடும் என்று சிந்தித்தேன். என் சிந்தனை முற்றுப்பெறு முன் "ஓ"வென்ற அழுகுரல் கேட்டு மலைத்துப்போனேன், மாடியிலிருந்து பறந்தோடி கீழே வந்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும், சுய உணர்வுடன் செய்தது அது. அதன்பிறகு என்னுணர்வை இழந்துவிட்டேன். "கண்ணீர்! கண்ணீர்!" எங்கும் கண்ணீர்! என்னைச்சுற்றிலும் கண்ணீர்! கண்ணீர்க் கடலின் நடுவே தத்தளிக்கும் படகின் நிலைபோலத்தான் என் நிலையும் ஆகிவிட்டது. வீழ்ந்தேன், புரண்டேன், வெந்துருகினேன்! என்னைச் சுற்றிலுமிருந்த சுயநலவாதிகள்—அந்த மாமனும் மாமியாரும் இரக்கப்பட்டு எனக்குக் கொடுத்தது "கண்ணீர்தான்" சுற்றுமுற்றுமுள்ளவர்கள் அங்கே வந்து கூடினர். அவர்கள் தத்தமக்குத் தோன்றியவாறு ஆறுதல் கூறினர், "பாவம், திருமணமாகி இன்னும் மூன்று மாதங்கள் கூட ஆகவில்லையே" என்பதுதான் அவர்களால் சொல்ல முடிந்த ஆறுதல்.

எதைத்தான் மறக்க முடியும்? உலைவாயைமூடினாலும் ஊர்வாயைமூட முடியுமா? உலகமே பேசிவிட்டது. அந்த சுயநலவாதிகளின்நச்சு எண்ணத்தைப்பற்றி. மகன் நோயாளி என்று நன்றாகத் தெரியும். மூன்று ஆண்டுகளாகப் படாதபாடில்லை. பார்க்காத மருத்துவரில்லை. கொடுக்காத மருந்தில்லை. பணத்தைப் பணமாகச் செலவிடவில்லை அவர் தாய் தந்தையர். "இறந்துவிடுவான் தம் மகன்" என்ற அளவிற்கு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டார்கள்.

வாழ்வை மென்று சுவைத்துவிட்ட அந்த கிழங்களுக்கு ஒரு வறட்டு எண்ணம் திடீரென்று தோன்றிற்று. சர்க்கார் உத்தியோகத்திலிருந்து, அத்தனை ஆண்டு மலையெனக்குவித்து வைத்திருக்கும் பணத்தை தங்களுக்குப்பிறகு மகன் இறந்துவிட்டால் அனுபவிக்க யாருமில்லையே என்ற எண்ணம்! ஆகா பரந்த எண்ணம்! என் வாழ்வையே பாலைவனமாக்கிய எண்ணம்! மகன் இறப்பதற்குள் திருமணம் செய்துவிட்டால், அவனுக்கு ஒரு மகன் பிறப்பான், தம் எண்ணம் நிறைவேறிவிடும் என்று எண்ணி

அவள் கண்ணீர் சிந்தினாள். நடந்ததை யெண்ணி மாத்திரமல்ல. கட்டியவனாயினும், தன்னைத் தொட்டறியாதவன் விட்டுச் சென்ற கடிதம் அவள் உள்ளக் குமுறலைப் பீறிட்டெழச் செய்தது. அந்தக் கடிதம் அவள் மறு வாழ்வுக்கு வழிகோலி விட்டதை யெண்ணி யெண்ணிக் குமுறியபோது வழிந்தோடியது கண்ணீர். அக்கண்ணீரைக் கிளறிவிட்ட உணர்ச்சியின் சித்தரிப்புத்தான் இது. ஆ—ர்.

ற்று அவர்களின் நச்சு மனம்! அந்த ''ஆல்'' விகுதியைச் சேர்த்து, திருமணம் செய்து கொண்டு; மகன் பிறக்காமலேயே அவன் இறந்துவிட்டால்'' என்று எண்ணிப்பார்க்க முடிந்ததா அந்த பரந்த நோக்கம் கொண்டவர்களால்.

பணத்தை முன்வைத்து, உள்ளதை மறைத்து, பெண் பேசினார்கள். இல்லை, வலை வீசினார்கள். வீசிய வலைக்கு அகப்படாமல் பிழைத்துக் கொண்டவர் பலர், நான் தான் அகப்பட்டுக்கொண்டேன். பணத்தைக் கண்டு மயங்கி விட்டார்கள் என் தாய்தந்தையர்—இல்லை, இல்லை மகள் பணக்கார குடும்பத்தில் வாழ்க்கை நடத்தப் போகிறாளேயென்றஒரேஎண்ணத்தின் ஆனந்தப் பூரிப்பிலே தங்களேயே மறந்தார்கள். தங்கள் அறிவையும் இழந்தார்கள். அதனால் அறியவேண்டிய அவசியமானவற்றையெல்லாம் அறியாதுவிட்டனர்! அதன் பலன் என்னை இந்த இறுதி கட்டத்திற்கு கொண்டுவந்து விட்டது!

நானும் எவ்வளவோ மனக் கோட்டையெல்லாம் கட்டியிருந்தேன். கட்டின மனக் கோட்டையை கனவிலே கண்டு மகிழ்ந்தேன். நினைவிலே, கோட்டையிருந்த இடத்தில் மண்மேட்டைத் தான் கண்டேன். அந்தமண் மேட்டையும் கண்ணீர் கடலின் அலைகள் அன்று அழித்து விட்டது.

அந்தக் குறுகிய வாழ்விலே!...அவருடைய நல்லெண்ணத்தை யெல்லாம் காண்பித்துவிட்டார். தன்னுடைய உடல் நிலையைப்பற்றெல்லாம் சொல்லுவார். அதைச்சொல்லி முடிப்பதற்குள்—இருதயத்தைப் பிடித்துக்கொண்டு சோர்ந்து கீழே விழுவார். அவர்மீது ஒரு குற்றமும் இல்லை என்பதை நன்றாக அறிந்து கொண்டேன். எல்லாம் அந்த சுயநலவாதிகளின் திட்டம் தான் என்பதை ஒரு சில சமயங்களில் அவரே சொல்லாமல் சொல்லிவைத்தார். அவர் இருக்கும் போதுகூட அக்கறை கொள்ளாமல், அவருக்குப்பின்னால் பிறக்கப் போகும் வாரிசைப்பற்றித் தானே கவலைப்பட்டார்கள்?

என் கணவர் அருகில் அமர்ந்து என் அழகைப் பார்த்துச் சுவைப்பார். ஆறுதலாக இருக்கும் என்று எண்ணி, அன்று நான் கண் திறந்து அவரை அணைத்துக்கொள்ளும் ஆர்வத்தில் எழுந்தேன். ஆனால் அவரோ அந்த அறையை விட்டு சென்று விட்டார், நடப்பவைகளெல்லம் புதுமையாகத்தானிருந்தன. அவர் உள்ளத்தை அறியாமல் சில சமயம் நான்கோபித்ததும் உண்டு. நான் எல்லா உணர்ச்சிகளையும் அடக்கி வைத்திருந்தேன். பாவம்அவரும் என் வாழ்விற்காக தன்னுடைய உணர்ச்சிகளையெல்லாம் அடக்கி அணைகட்டி வைத்திருந்தார். அதன் காரணத்தை இப்போதுதான் அறிகிறேன்.

மணம் செய்துகொண்ட பிறகு அவருடைய நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டே வந்தது. அவர்கள் தீட்டிய திட்டத்தைத்தான் எங்கே நிறைவேற்றுவது? அதற்குத்தான் அவரே தடையாய் இருந்தாரே? அந்த மூன்று மாதத்தில், அந்த சுயநலவாதிகள் என்னை ஒன்றும் சொன்னதே இடை யாது! அப்பா! அவர் இறந்துவிட்ட பிறகு, என் கண்ணீரைக்கண்டு, மகனின் தாயார் சொற்களை நீட்டி, ''உனக்கு எதுக்கு, அவ்வளவு பெரிய கவலை, இப்போ வந்தவள் நீ, இத்தனை ஆண்டுகளாக அவனுடனிருக்கிறோம். எங்களுக்கே......''

இதைக்கேட்டு என்ன சொல்வது என்று தெரியாமல் அழுதேன். அப்போதெல்லாம் என் கணவர் வழக்கமாகச் சொல்லும் குறள் தான் என் நினைவிற்கு வந்தது.

''துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி''
என்பதுதான்.

துன்பத்திற்குத் துணையாக என் நெஞ்சத்தை அழைத்தேன்! ஆனால், அதன் துணை என் துன்பத்தை அதிகமாக்கியது. அதன் துணையை விட்டும் பார்த்தேன்.

அந்த சுயநலவாதிகளுக்கு, அவர் இறந்தபிறகு அவர்களுடைய பரந்த மனத்தில், மற்றொரு படர்ந்த கவலை! அது என்னவென்றால், ''கணவனுடையது மனைவிக்குச் சொந்தம் என்ற முறையில் எங்கே பணமெல்லாம் என்னைச் சேர்ந்துவிடப் போகிறதோ'' என்று... ஆகா! அதற்காக எத்தனை சூழ்ச்சி! எத்தனை வளைவு, நெளிவுகள் பேச்சிலே!

அறிவு கெட்டவர்கள்! ஆறறிவு படைத்தவர்கள் மனிதர்கள் என்கிறார்கள். அதில் இந்த சுயநலவாதிகளுக்கு அரை அறிவுகூட இருக்காதுபோலிருக்கிறதே! நான் என்ன பணத்தையா திருமணம் செய்துகொண்

டேன்? அவரே இறந்து விட்ட பிறகு, என் கணவர் என்னை மனைவியென்று மதித்ததுமில்லை. அணைத்ததுமில்லை, சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், என் உடன்பிறந்த அண்ணன் போல நடந்துகொண்டார். அதை உலகம் அறியுமா? அன்றுகண்ணீர்விட்ட அந்த மக்கள் தாம் செவிசாய்த்து கேட்பார்களா? சமூகமாம் சமூகம்! சமுதாயத்துச் சட்டமாம்! நான் "விதவை" என்னை மறுமணம் செய்து கொள்ள யார் முன்வருவார்கள்?

அவர் நல்லதைநாடி என்னை அணுகாமலிருந்தார். ஆனால் இன்றோ!...அவர் அப்படி செய்யாமல் என்னை ஒரு குழந்தைக்குத் தாயாராக்கியிருந்தால், இந்த வஞ்சனை சூழ்ந்த உலகத்திலே, அந்த குழந்தை மழலைச்சொல்லிலே என்னை 'அம்மா!" என்று கூப்பிடுவதைக் கேட்டாவது, "கண்ணீர்" சூழ்ந்த என் கண்கள் மகிழ்ச்சியால் பூரிப்படைந்திருக்கும். இன்று இந்நிலையில்லை.

"விதி...விதியின் திருவிளையாடல்" கண்ணீருக்குச் சமுதாயத்து மக்கள் சுருக்கமாகச் சொல்லும் காரணப் பெயர்கள்! பெண் உள்ளத்தை அவர் ஒருவர்தான் நன்றாக அறிந்திருந்தார். ஒரு நாள் என்னுடைய அறையில் ஒரு புத்தகத்தினுள் ஒரு மடலைக் கண்டேன். அதை அவர் இறப்பதற்கு முன் எழுதி வைத்திருக்கவேண்டும். அந்தக் கடிதம் கையில்! கண்கள் வேகமாகப்படித்தன! இருதயமோ சிறகடித்துப் பறப்பதுபோல தோன்றிற்று! கருத்தோ கடந்ததையெல்லாம் கண்முன்கொண்டு வந்து நிறுத்திற்று! அந்தக் கடிதம் சிலவினாடி ஆறுதலாகவும், சில வினாடி, என் கண்களை கலக்குவதாகவுமிருந்தது.

அன்புள்ள தேமொழிக்கு,

வணக்கம்...தேமொழி, என்ன! மடலே மாற்றம் அடைந்திருக்கிறதே என்று வியப்படைய வேண்டாம்! நீ என் தங்கை என்ற நிலையில் வைத்து இம் மடல் எழுதுகிறேன்.

மணப்பந்தலில் "கணவனும் மனைவியுமாக" இருந்தோம். அதன் பிறகு "அண்ணனும் தங்கையுமாக" வாழ்ந்தோம்! எதற்காக?...புரிந்து கொண்டாயா; இல்லையா? நான் அறியேன்: என் முடிவைப் பற்றி. ஆகவே ஒரு பெண்ணின் வாழ்வு என்னால் கெட்டுப்போகக்கூடாது என்பதற்காக, என்மனத்தை, என் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்திக்கொண்டேன். ஏன்? என்ற கேள்வியெழலாம். நான் இறந்தபிறகு நீ மறுமணம் செய்து வாழவேண்டும். இந்த அபிப்பிராயம் புதுமையாக இருக்கிறது என்கிறாயா? என்ன அப்படி நல்லெண்ணம் கொண்டவர் என் முதலில் மணத்திற்கு ஒப்புக்கொண்டிருக்கவேண்டும் என்று கேட்கிறதல்லவா உன் உள்ளம்? என் இதோ உலகமும் கேட்கிறதே! ஆம் உண்மைதான்! தவறுதான்; குற்றம் தான். ஆனால் அன்று பெற்றெடுத்த தாய்தந்தையர் கண்ணீர்விட்டு அந்த உரிமையைக் கேட்டனர். உரிமையைக் கொடுத்தேன். ஆனால் இப்போது உணர்ந்து மறுமுறையும் குற்றம் செய்வதா?......ஆகவே என்னுடைய புதுமையான, (இல்லை புரட்சிகரமானதும் என்றுகூட சொல்லலாம்) கருத்தில் என்ன தவறு? அப்படி தவறு என்று சமூகம வற்புறுத்தினாலோ, அந்தச் சமூகம் அழியட்டும்! புதுமைக் கருத்துக்கொண்ட புதுச் சமுதாயம் தோன்றட்டும்!

ஆகவே இதோ நானே உரிமைத் தருகிறேன்! கணவன் என்ற முறையில் அல்ல! அண்ணன் என்ற முறையில். இந்த மடலை முன் வைத்தே மறுமணம் செய்து கொள்ள, எல்லா பணத்தையும் உன் பெயரிலேயே எழுதிவிட்டேன். நீ மறுமணம் செய்து பிறக்கப்போகும் குழந்தைக்கு அவைகளை என் பெயர் சொல்லி—என் வாழ்வைப் புதுப்பித்தவர் கொடுத்தவை என்று கொடு! அதுவே எனக்குப் பெருமை தரும்.

உன் அன்புள்ள

செல்வன்.

மடலை என் கண்ணீர் சூழ்ந்த கண்கள் படித்தன! என்னென்னவோ எண்ணங்கள் எல்லாம் படித்தப்பின் தோன்றின. அந்தப் புரியாத நிலைமையில் என்னிடத்தில் மிஞ்சியிருந்தது "கண்ணீர்" தான். பிறக்கும்போதும் கண்ணீர்! அது ஆனந்தக் கண்ணீர். இறக்கும் போதும் கண்ணீர்! அது துயரக் கண்ணீர். இடைக்காலத்தில் ஏற்படும் துன்பங்களிலும் முன் நிற்பது கண்ணீர்.

* * *

"இயலும் துறைகளிலெல்லாம் தன் திறமையை அபிவிருத்தி செய்து கொள்வதே ஒரு இளைஞன் உயர்வடைய வழி".

—லிங்கன்

பாரதி காட்டிய பாதை

[பெ. வெ. காளியப்பன்]

ஒரு குடியானவன் வீட்டில் எட்டு லட்சுமிகளும் ஒன்ருக வசித்தார்கள். அவனுக்கு. கெட்டகாலம் எட்டியதோ யென்னவோ! அவர்கள் அவனை விட்டுப் பிரிய ஒரு நாள் தீர்மானித்தார்கள்.

இந்த முடிவை அந்தக் குடியானவனிடம் தெரிவித்தார்கள். "சரி நீங்கள் போகலா"மென்று கூறி விட்டு தன்னுடைய வீட்டின் முன் வாயிற் பக்கம் போய் ஓர் பெருந் தடியை எடுத்துக்கொண்டு வந்து நின்று கொண்டான். தாங்கள் திட்டமிட்டதின்படி ஒவ்வொரு லெட்சுமியாக வெளியேறினர். ஒவ்வொருவரிடமும் நீ என்ன லெட்சுமி? நீ என்ன லெட்சுமி யென்று கேட்டுக்கேட்டு வெளியே போக விட்டான். அதிலே ஒருத்தி, தான் தனலெட்சுமி என்ருள்; மற்ரெருருத்தி தானிய லெட்சுமி என்ருள். இவ்விதமாக ஏழு லெட்சுமிகளும் தங்களுடைய பெயர்களைக் கூறிவிட்டு வெளியேறினர்.

இறுதியாக வந்த லெட்சுமியை நீ என்ன லெட்சுமி என்று கேட்டான்; அதற்கு அவள் தைரியமாக நான் தைரிய லெட்சுமி என்று கூறிவிட்டு தன்னுடைய வலது காலை வாசற்படியின் முன்வைத்து ஓர் அடி எடுத்து வைத்தாள். அதற்கு அக்குடியானவன் தன் கையிலுள்ள பெருந்தடியைக் காட்டி நீ மட்டும் வெளியேறினல் உன் காலை முறித்து விடுவேன். மரியாதையாக திரும்பி உள்ளே போ" வென்று அதட்டிக் கூறினன்.

இக்கதையிலிருந்து நாம் புரிந்து கொள்வதென்ன? திக்கான உடலும், திண்ணிய தோளும், உரம்படைத்த உள்ளமும் வேண்டுமென்பது தானே? இக்கதையைத் தான் அந்நாளிலே பாரத நாட்டிற்கு பாரதியார் தம் உரம்வாய்ந்த சுதந்திர வீர உணர்ச்சியால் மென்மையான தமிழ் மொழியிலே கூறிச்சென்ருர்.

ஒளி படைத்த கண்ணினய்-!
வா! வா! வா
உறுதி கொண்ட நெஞ்சினய்-வா! வா! வா!
களி படைத்த மொழியினய்-
வா! வா! வா!
கடுமை கொண்ட தோளினய்-வா! வா! வா!

பங்கஜம் பிரிண்டிங் கார்ப்பரேஷன்

65, N. P. S. தெரு, சிவகாசி.

★

நாங்கள் எல்லாவிதமான மல்டி கலர் காலண்டர்கள், பீடி ராப்பர்கள், பீடி லேபில்கள், சோப் ராப்பர், சோடா லேபில்கள் அழகான முறையில் குறித்தகால அளவிற்குள் தாமதமில்லாமல் சப்ளை செய்து வருகிறேம்.

உரிமையாளர்கள் :

R. கணேசன்

K. C. காளியப்பன்

மண் அரைக்க இயந்திரம்

[கோவை. சு. சண்முகம்]

"கைத்தொழில்களை இயந்திர மயமாக்குவதில் எத்தனையோ நன்மைகள் இருக்கின்றன. சாமான்களின் தரத்தை உயர்த்தி, அதே நேரத்தில் அவைகளின் விலைகளைக் குறைப்பதே ஒருகைத்தொழிலின் நோக்கமாக இருக்கவேண்டும்" என்று அரசாங்க அதிகாரி ஒருவர், மண் பாண்ட புனர் நிர்மாண சங்கக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டிருந்தார். இது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். கைத் தொழில் சாமான்கள் குறைந்த விலையில் கிடைப்பதையே எல்லோரும் விரும்புவர். மண் பாண்டங்கள் எவ்வளவு தான் நல்ல தரத்தில் செய்திருந்தாலும், வாங்குவோர் குறைந்த விலையையே மதிப்பிடுகின்றனர். ஒரு மண் குடம் எட்டு அணு விலை பெறுகிறது என்ருல், "என்ன! இந்த மண் குடத்திற்கு, அரை ரூபாயா?" என்று அங்கலாய்க்கின்றனர், சாதாரணமான அந்த மண் குடத்திற்கு எவ்வளவு உழைப்பு, எத்தனை மூலதனம் பிடிக்கிறது என்பதை வாங்குவோர் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை.

கரடு முரடாகக் கிடக்கும் ஒரு கல்லை அழகுச் சிலையாக வடிக்கவேண்டுமானுல், அதற்காக எவ்வளவு உழைப்பை—காலத்தை—கற்பனைத் திறனை—செலவிடுகிருன் சிற்பி? அதுபோலத் தான் காட்டு மண்ணைக் கொண்டு, கண்கவர் மண் பாண்டங்களை உண்டாக்க கடினமான உழைப்பும், பணச் செலவும் ஆகிறது. இவ்வளவுக்குப் பிறகு, அவைகள் விற்பனைக்கு வருகின்றன. இத் தகைய பாண்டங்களை குறைந்த விலைக்கு மதிப்பிட்டால், அந்த உழைப்பாளிகளுக்கு கட்டுப்படியாகுமா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அரசாங்க அதிகாரி சொல்வதுபோல, கைத் தொழில்கள் இயந்திர மயமாக்கப்பட்டு உழைப்பைக் குறைத்து, அதே சமயத்தில் உற்பத்தியை அதிகரித்தால், அதன்மூலம் ஓரளவுக்காவது விலையைக் குறைக்கச் செய்யலர்ம்; அதிகமான மக்களும் பயனடைவார்கள்.

உதாரணமாக அலுமினியப் பாத்திரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். பித்தளைப் பாத்திரங்களை விட குறைந்த விலையில் அவைகள் கிடைப்பதால் அதிகமாக விற்பனையாகின்றன. குறைந்த மூலதனச் செலவில் இயந்திரங்களைக் கொண்டு, அதிகமாக உற்பத்தி செய்வதாலேயே அவைகளை எளிய விலைக்கு விற்க முடிகிறது. அதனுல் ஆதாயமும் இருக்கிறது. ஆனுல் பித்தளைப் பாத்திரங்கள் அப்படியல்ல. அதற்கு அதிகமான உழைப்பும், மூலதனமும் தேவை. ஆகவே விலையும் அதிகமாக இருக்கிறது.

தமிழ் நாட்டைப் பொருத்தவரை, மண் பாண்டத் தொழிலில் இதுவரை எந்த விதமான இயந்திர முறையையும் புகுத்தியாதகத்தெரியவில்லை. இப்பொழுது தான் அதைப்பற்றி உணர்ந்துவருகின்றனர். முதற்கட்டமாக மண்ணை அரைப்பதற்கு இயந்திரங்களைப் புகுத்தலாம், பாத்திரங்களை உருவாக்குவதற்கேற்ப, "கூட்டு" மண்ணை அரைத்து அதாவது பிசைந்து அதைப் பக்குவப் படுத்துவதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பது அத் தொழிலில் உள்ளவர்களுக்குத் தான் தெரியும். ஆகவே அதற்காக "மண் அரைக்கும் இயந்திரங்"களை ஏற்படுத்தி, அதற்காகும் காலத்தை-உழைப்பை-பாண்டங்களை உருவாக்குவதில் செலுத்தி, உற்பத்தியை அதிகப்படுத்தலாம். அதன் மூலம் விலைகளைக் குறைக்க வழியேற்படும்.

சென்னை ராஜ்ய கூட்டுறவு மண்பாண்ட தொழிலாளர் சங்கங்களுக்கு, இம்மாதிரி மண் அரைக்கும் இயந்திரங்களை சர்க்கார் ஏற்படுத்தித் தரவேண்டும். தொழிலாளர் சங்கங்களும் இது விஷயமாக அரசியலாரை வற்புறுத்த வேண்டும்.

* * *

இன்னொருவனின் அனுமதியின்றி அவனை ஆள எந்த மனிதனும் தகுதியுடையவன் அல்ல.—லிங்கன்,

கலை மணம்

கருத்துரை :

பெரியகோயில்

திரு. ஏ. கே. வேலனின் இரண்டாவது சிருஷ்டி

பெரிய கோயில் என்ற தலைப்பு அழகாய் இருக்கிறது. அதன் பொருள் அதை விட அழகாய் இருக்கிறது. உலகத்தில் தாய்தான் பெரிய கோயில் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு கதையை உருவகம்செய்திருக்கிறார். தாய் உள்ளத்தின் பிரதிபலிப்பைக் காட்டிஅந்த தியாக உள்ளத்தின் உறைவிடமான இதயந்தான் உலகிலேயே பெரிய கோயில் என்றகருத்துக்குஆசிரியரின் கதை அமைப்பு எதிர்பார்த்த அளவு பயன் படவில்லை என்று தான் கூற வேண்டும். தாயின் தியாகப் பண்புகளைக் காட்டிலும் கதையில் வேண்டாத காட்சிகளை கட்டாயமாகப்புகுத்தி கதையை முடித்திருக்கிறார். இது வேலனின் கற்பனைக் குறைவைக் காட்டவில்லை. ஆனல் அவசரத்தின் கோளாறு என்று தான் சொல்லவேண்டும். அருணாசலம் பிக்ஸர் படம் என்றால் அது ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்றுவது அமைந்திருக்க வேண்டும்.

ஆனல் அதுகூட இல்லாமல் ஏதோ இருக்கிறது என்ற எண்ணம் பொதுமக்கள் இதயத்தில் இருந்து வந்து விடக் கூடாது என்பதே நமது விருப்பம், வேலன் தமிழ்பற்று மிகுந்தவராதலால்,

ஆசிரியர் வேலன் கதை அமைப்பில் காட்டிய அக்கறையைவிட சில விடங்களில் வசனத்தில் காட்டிஇருக்கிருர். அதை விட டைரக்ஷனில் காட்டி இருக்கிறார். படம் முழுவதும் வேலனின் அழகு தமிழ் சொற்கள் கற்கண்டாய் இனிக்கின்றன. சில இடங்களில் அற்புதமாகவும் ஒலிக்கின்றன. சிறைச்சாலையில் இருக்கும் தன் கணவனிடம் தன் குழந்தை பறிபோய் விட்டதைக் கூறி செல்லம் கதறும் போதும் பின்பு அவள் தற்கொலை செய்யப் போகும்போதும் அவள் மனச்சாட்சி பேசும் போதும் வசனம் சிறப்பாக அமைந்துள்ளது. புலவரல்லவா! தமிழ் விளையாடுகிறது! நகைச்சுவை வசனங்கள் சிரிப்பை ஊட்டுவதுடன் சிந்திக்க வைக்கவும் செய்கிறது. பாராட்ட வேண்டிய செயல்,

நகைச்சுவை யூட்டும் நல்ல தமிழ் புலவராகவரும் வி. கே. ராமசாமி நம்மை வயிறு வலி

ஏங்கிய நெஞ்சத்தோடு எதிர் நோக்கும் காதலியோ! மொராக், சீனி வாஸ் பிலிம்ஸ் கூட்டுத் தயாரிப்பான பாண்டித் தேவனில் ராகினி.

க்க சிரிக்க வைக்கிறார். இந்தப் படத்தில் அவரைப் பார்த்தாலே சிரிப்பு வருகிறது நமக்கு. அவருடைய மனைவியாக வரும் கமலம் அவருக்கு ஏற்றாற்போலவே நடித்திருக்கிறார்.

இவர்களின் மூத்த பெண்ணாகவும், முத்தையனின் மனைவியாகவும் ராஜம் நடித்திருக்கிறார். அவர் கதாநாயகியாக நடிக்கும் முதல் படம் இது; இத்தனை காலமும் அவரைக் கதாநாயகியாகப் போடாமல் இருக்கும் பட முதலாளிகளுக்கு சவால்விடுவது போல் இருக்கிறது அவருடைய அற்புதமான நடிப்பு. படத்தின் ஜீவனே ராஜத்தின் அருமையான நடிப்பில் ஊசலாடுகிறது என்றுகூட சொல்லலாம்! நல்ல நடிப்புடன் அவர் பேசும் தமிழ் சொற்கள் கணீரென்று ஒளிக்கின்றன. இவருடைய கணவனாய் நடித்திருக்கிறார் பிரேம் நஸீர். கதிரவனிடம் இருந்துஒளிபெறும் சந்திரன் போல் ராஜத்தின் அருமையான நடிப்பால் பிழைக்கிறார் பிரேம் நஸீர். நடிப்பில் அவர் இன்னும் கவனம் செலுத்த வேண்டும். பூட்டுக்கு ஏத்த சாவிராவிக் • கொடுக்கும் சாயபுவாக வரும்போது வேஷப் பொருத்தம் நன்றாக இருக்கிறது. தாயாக வரும் கண்ணாம்பாவுக்கு பழக்கப்பட்ட பாகம் என்றாலும் பெரிய கோயிலில் அவர் நடிப்புப் பற்றிக் கூற சொற்கள்

மங்கை நல்லாள் இங்கிருக்க எங்கே ஐயா பார்வை!
கமால் புரொடக்ஷன்ஸ் சுமதியில் சிவாஜி கணேசனும், பத்மினியும்.

A. T. H.

Arumugam Tailoring House

GOVERNMENT CERTIFIED TAILOR &

SUPPLIER OF READY MADE GOODS FROM

BUCKINGAM AND CARNATIC FABRICS

Shortly opening New Show-room

No. 16, Arunachala Naicken Road,

CHINTADRIPET, MADRAS-2

இல்லை என்றுதான் கூற வேண்டும். அவ்வளவு கடுமையான நடிப்பு அவருடையது.

ஊமையாக நடிக்கும் போதும், போலீஸைக் கண்ட போது தன் பேரனின் நிலையை எடுத்துச் சொல்ல முடியாமல் தவிக்கும்போதும் அவருடைய நடிப்பு அருமை.

மோகனசுந்தரமாக வரும் டி. ஆர். நடராஜனின் நடிப்பு சிவாஜியின் நகலாய் இருக்கிறது. தனக்கென ஒரு முறையை அவர் கையாண்டால் எதிர்காலத்தில் நல்ல வரவேற்பு கிடைக்கும் அவருக்கு.

இருவேடங்களில் வருகிறார் சந்திரகாந்தா! நல்ல எதிர்காலம் இருக்கிறது இவருக்கு. தெலுங்கு நடிகர் சலம் வந்து போகிறார். கதையிலும் அவர் வந்து போகின்றவராகவே இருக்கிறார்.

வேலன் டைரக்ட் செய்த இரண்டாவது படம் இது! சில இடங்களில் டைரக்ஷனில் கூட இலக்கியச் சுவை சொட்டுகிறது.

மருதகாசியும் முத்துசாமியும் பாடல் இயற்றி மகாதேவன் இசை அமைத்திருக்கிறார். 'கண்ணே கமலப்பூ' என்ற பாடல் இதயத்தே ஓடுகிறது. மகாதேவனின் இசை செவிக்கு இன்பமூட்டுகிறது.

'வலை வீசம்மா வலை வீசு!' என்ற பாடல் இந்திபடத்தின் காப்பி! ஆனால் கருத்து நிறைந்த பாடல் அது! மணியத்தின் படப்பிடிப்பு நன்றாக இருக்கிறது.

சாயிசுப்புலட்சுமியின் அருமையான நடனம் ரஸிகர்களுக்கு அருமையான கலை விருந்து! மிகவும் குறுகிய காலத்தில் தமது இரண்டாவதுபடமான பெரிய கோயிலை அவசரப்பட்டு அவர் கட்டி இருக்கிறார். பொதுவாய் எல்லோரும் பார்க்கவேண்டிய படம் இது. —சோ. க.

அந்தகர் செய்யும் அன்றாட வேலை



டாக்டர் சுபோத் சி. ராய். கல்கத்தாவில் "கண் தெரியாதார் கலங்கரை விளக்கம்" என்னும் சங்கத்தைத் தோற்றுவித்தவர், 13 ஆண்டுகளாய் அமெரிக்காவில் வசிக்கும் அமெரிக்க பிரஜை.

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.
Asst. Editor: K. G. Raju.